கருநாடக அரசு

# சமூக அறிவியல்

## (புதுப்பிக்கப்பட்டது - REVISED)

## பாகம் – 2

# 8

## எட்டாம் வகுப்பு

## 8th Standard


**ಕರ್ನಾಟಕ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘ (ರಿ.)**

100 ಅಡಿ ವರ್ತುಲ ರಸ್ತೆ, ಬನಶಂಕರಿ 3ನೇ ಹಂತ,
ಬೆಂಗಳೂರು – 85


©KTBS Not to be republished

# பொருளடக்கம்


| வ. எண். | பொருள் | ப.எண் |
|---|---|---|
| | **வரலாறு** | |
| 1. | மௌரியர்கள் மற்றும் குஷாணர்கள் | 1 |
| 2. | குப்தர்கள் மற்றும் வர்த்னர்கள் | 9 |
| 3. | தென்னிந்திய சாதவாகனர், கடம்பர், கங்கர் | 18 |
| 4. | பாதாமியின் சாளுக்கியர்கள் மற்றும் காஞ்சிப் பல்லவர்கள் | 27 |
| 5. | மான்ய கேதாவின் ராஷ்ட்ர கூடர்கள் மற்றும் கல்யாணா சாளுக்கியர்கள் (கி.பி 753-973) | 34 |
| 6. | சோழர்களும், துவார சமுத்திராவின் ஓய்சாளர்களும் (கி.பி. 850-1279) | 41 |
| | **அரசியல் ஆட்சியியல்** | |
| 1. | மனித உரிமைகள் | 47 |
| 2. | உள்ளாட்சிகள் | 53 |
| | **சமுதாய இயல்** | |
| 1. | சமுதாய அமைப்புகள் | 65 |
| 2. | சமுதாயங்களின் வகைகள் | 71 |
| | **நில நூல்** | |
| 1. | காற்றுக் கோளம் | 82 |
| 2. | நீர்க்கோளம் | 95 |
| 3. | உயிர்க் கோளம் | 103 |
| | **பொருளியில்** | |
| 1. | தேசிய வருமானம் மற்றும் இந்தியாவின் பொருளாதாரத் துறைகள். | 109 |
| 2. | அரசு மற்றும் பொருளாதார நிர்வாகம் | 119 |
| | **வணிகவியல்** | |
| 1. | வியாபாரம் - பொருள் மற்றும் சிறப்பு | 128 |
| 2. | வெவ்வேறு வணிக அமைப்புகளின் உற்பத்தி நிறுவனங்கள் | 137 |


©KTBS Not to be republished

# வரலாறு

## அத்தியாயம் - 1

# மௌரியர்கள் மற்றும் குஷாணர்கள்

**இப்பாடத்தைக் கற்றபின் நீங்கள் அறிவன:**

- *இந்தியாவில் முதல்முதலாக எழுந்த பேரரசு, மௌரியப் பேரரசுதான.*
- *மௌரியப் பேரரசின் புகழ் பெற்ற பேரரசன் அசோகனின் சாதனை, நிர்வாகமும் தொண்டுகளும்.*
- *குஷானர்களின் வரலாறு மற்றும் கனிஷ்கரின் நிர்வாகமும், பங்களிப்பும்.*
- *இந்திய வரைபடத்தில் அசோகப் பரம்பரையின் ஆட்சி எல்லையை குறித்தலும்.*

**மௌரியர்கள்**

மௌரியப் பேரரசே இந்தியாவின் முதல் பேரரசாகும். இவர்கள் மகதத்தை தலைநகராக கொண்டு ஆட்சி செய்தனர். சந்திர குப்தன், பிந்துசாரன் மற்றும் அசோகன் போன்றோரே இந்த அரச குடும்பத்தின் அரசர்களில் முக்கியமானவர்கள். இந்த அரச குடும்பம் சந்திர குப்த மௌரியனால் நிறுவப்பட்டது. இவனின் முக்கியத்துவத்தை கிரேக்க தூதுவராக இருந்த ''மெகாஸ்தானில்'' தன்னுடைய ''இண்டிகா'' நூலில் வரைந்து பெருமைபடுத்தியுள்ளான்.

**ஆதாரங்கள்**

மௌரிய பேரரசின் வரலாற்றை அறிய நமக்கு கிடைத்துள்ள ஆதாரங்கள். மிகக் குறைவானது. ஆனால் அவைகள் கொடுக்கும் தகவல்கள் அற்புதமானவை. அவை களைப் பற்றி கீழ்க் கண்டவாறு காண்போம்.

**''மெகாஸ்தானிஸ்'' ''இண்டிகா''**

மெகாஸ்தானிஸ் கிரேக்க நாட்டு தூதுவராக சந்திரகுப்த மௌரியனின் ஆஸ்தானத் திற்கு வந்தார். அவர் மௌரியனின் தலைநகரான பாடலிபுத்திரத்தில் தங்கி தன்னுடைய அனுபவங்களை ''இண்டிகா'' என்ற நூலில் எழுதியுள்ளார். இந்த நூல் நமக்கு தற்போது கிடைக்கவில்லை என்றாலும் அதில் உள்ள விசயங்களை அவருக்கு பிறகு வந்த கிரேக்க எழுத்தாளரான ''டையோதாரஸ்'' ஸ்டரபோ, பினினி, சிக்லல் மற்றும் ஆரியன் போன்றவர்கள் தங்களுடைய நூலில் எழுதியுள்ளனர். ''இண்டிகா'' நூலில் மௌரியர் காலத்து நகராட்சி, சமூகம் மற்றும் பொருளாதார விசயங்களை குறித்து தெரிவிக்கிறது.

**அர்த்த சாஸ்திரம் :** அர்த்த சாஸ்திரத்தை சந்திர குப்த மௌரியனின் குரு மற்றும் பிரதம மந்திரியான கௌடில்யன் எழுதியது. அவனுக்கு சாணக்கியன் மற்றும் விஷ்ணுகுப்தன் என்ற பெயர்களும் உள்ளன. அர்த்த சாஸ்திரத்தை சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டு



©KTBS Not to be republished

உள்ளது. இது ஒரு அரசன் அறிய வேண்டிய அரசாட்சி, வெளிநாட்டுறவு, நீதி நேர்மைகளை விளக்கமாக தெரிவிக்கிறது. இந்த நூலிலிருந்து மௌரியர் காலத்து அரசியல், பொருளாதாரம், நிர்வாகமுறை, சமுதாயம் போன்றவற்றை அறிய முடிகிறது.

**அர்த்த சாஸ்திரம்**

1902-ல் மைசூரின் ஓரியண்டல் நூலகத்தில் ஆர்.சாமா சாஸ்திரி அவர்கள் கௌடில்யன் எழுதிய அர்த்த சாஸ்திரத்தின் கையெழுத்துப் பிரதியை கண்டுபிடித்தார். இது மேற்கத்திய உலகம் கண்டு கொண்ட அர்த்த சாஸ்திரத்தைவிட வேறுபட்டு இருந்தது. கௌடில்யனின் அர்த்த சாஸ்திரத்தில் நாட்டை ஆட்சி செய்யும் முறைகள், அரசன், பிரதமர் மற்றவர்களின் பொறுப்புகள், வெளிநாட்டுறவுகள், நிதி நிர்வாகம் பற்றி கலந்துரையாடப் பெற்றுள்ளன. ஒற்றறிதல் துறை, படை அமைப்பு, முறை பற்றி சிறப்பான முடுகக்கடிஇயத்தவத்தை அர்த்த சாஸ்திரத்தில் தரப்பட்டுள்ளது. கௌடில்யனின் அர்த்தசாஸ்திரம் ஆயிரக்கணக்கான வருடங்களுக்குப் பிறகும் தன்னுடைய தனித்தன்மையினால் உலக முழுவதும் கல்வியாளர்களை கவர்ந்துள்ளது.

**முத்திர ராக்சஸ**

இது விசாக தத்தன் எழுதிய ஒரு சமஸ்கிருத நாடகம். இதில் கௌடில்யனின் சந்திரகுப்த மௌரியனை அதிகாரத்திற்கு கொண்டு வந்த போரைப் பற்றி வர்ணிக்கப்பட்டுள்ளது.

**தீபவம்சம் மற்றும் மகாவம்சம்**

இது இலங்கையின் புத்த இலக்கிய கதைகள். இதில் அசோகன் புத்த சமயத்தை இலங்கையில் பரப்பியதை பற்றிய விவரங்கள் கிடைக்கின்றன.

**அசோகனின் கல்வெட்டுக்கள் (சாசனங்கள்)**

அசோகனைப் பற்றி மிக முக்கியமான, அதிகாரப் பூர்வமாக கூறும் குறிப்புகளென்றால் கல்வெட்டுகள். இந்த கல்வெட்டுக்களிலிருந்து அசோகப் பேரரசின் எல்லை. மற்றும் அவனின் ''தம்மா'' பற்றிய விவரங்கள், கலிங்கப் போர் பற்றிய விவரங்கள், முதலியவற்றை அறியலாம்.

**சந்திர குப்த மௌரியன் ங்ச.ம.பி.321-298சீ**

மௌரிய பேரரசை சந்திர குப்த மௌரியன் நிறுவினான். சந்திர குப்த மௌரியன் தன்னுடைய குருவான கௌடில்யனின் வழிகாட்டுதலின்படி நந்த வம்சத்தின் கடைசி அரசனை பதவியிறக்கம் செய்து, 25-ம் வயதில் அதிகாரத்திற்கு வந்தான். இந்த வேளையில் வடமேற்கு பாரதத்தில் பஞ்சாப் பகுதிவரை இந்த பகுதியை அலெக்சாண்டரின் ஆட்சியாளரான செலோகஸ் நிகோடர் ஆண்டு வந்தான். (ச.ம.பி) 305ல் அவனுடன் சந்திரகுப்த மௌரியன் போர் தொடுத்தான். முடிவில் போர் ஒப்பந்தத்துடன் முடிவானது. அதனால் செலோகஸ் இன்றைய ஆப்கானிஸ்தான் மற்றும் பலோஜிஸ்தானின் பிரதேசங்கள் சேர்ந்து நான்கு பிராந்தியங்களை சந்திரகுப்த மௌரியனுக்கு விட்டுக் கொடு



©KTBS Not to be republished

த்தான். அல்லாமல் தன்னுடைய மகளை சந்திர குப்த மௌரியனுக்கு திருமணம் செய்து வைத்தான். சமண சமயத்தின் ஒரு சம்பிரதாயத்தின் படி சந்திரகுப்த மௌரியன் தன்னுடைய கடைசிகாலத்தில் சமண சமயத்தை தழுவினான். அவனுடைய பேரரசை தன்னுடைய மகனான பிந்து சாரனிடம் ஒப்படைத்து விட்டு சமண குருவான பத்ரபாகு மற்றும் சில உறவினர்களுடன் கர்நாடக மாநிலம் ஹாசன் மாவட்டத்தில் இருக்கும் சிரவணபெலகோலாவிற்கு வந்தான். இந்த சம்பிரதாயம் முடிவில் செலோகான் விரதம். சாகும் வரை உண்ணாவிரதம்சி இருந்து அங்கேயே மரணமடைந்தான் என்று கூறுகிறது.

**அசோகப் பேரரசன் ங்ச.ம.பி 273-232ச**

இந்திய வரலாற்றில் அசோகன் இந்த வம்சத்தின் மிகப்பெரிய புகழ் பெற்ற அரசன். பிந்துசாரனின் மகனான அசோகன் தன்னுடைய தந்தையின் ஆட்சியின்போது உஜ்ஜையினி மற்றும் தக்ஸசில்லா பகுதியின் ஆளுனராக செயல்பட்டு வந்தான். தக்ஸசில்லாவில் ஏற்பட்ட மோதலை வெற்றிகரமாக முறியடித்தான். தந்தை பிந்துசாரனின் மரணத்திற்கு பிறகு சிம்மாசனத்திற்காக தன்னுடைய 99 சகோதரர்களை கொன்று அதிகாரத்திற்கு வந்தான் என்று புத்த வரலாறுகள் கூறுகின்றன.

ஒரு வேளை சகோதரர்களுடன் நான்கு ஆண்டு காலம் உட்பூசல் ஏற்பட்டிருக்கலாம். ச.ம.பி.269ல் சிம்மாசனத்திற்கு வந்தான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தான் ஆட்சிக்கு வந்த எட்டாம் வருடத்தில் அசோகன் கலிங்கநாட்டின் மீது போர் தொடுத்தான். அரசனான பிறகு அசோகன் நடத்திய ஒரே ஒரு யுத்தம் இதுவாகும்.

**கலிங்கப்போர்**

மௌரியப் பேரரசின் தலைமையை ஏற்றுக் கொள்ளாத கலிங்க நாட்டை கைப்பற்றிக் கொள்ள (ச.ம.பி) 261ல் அசோகன் கலிங்கத்தின் மீது போர் தொடுத்தான். இந்தப் போரைப் பற்றி அசோகனின் 13வது கல்வெட்டில் தகவல்கள் கொடுக்கிறது. அதன்படி அசோகன் அதிகாரத்திற்கு வந்த எட்டாம் ஆண்டில் கலிங்கத்தின் மீது போர் தொடுத்தான். போரில் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் பேர் சிறைபிடிக்கப்பட்டனர். ஒரு இலட்சம் பேர் கொல்லப்பட்டனர். பல மக்கள் நாட்டை விட்டே ஓடினார்கள். அசோகன் கலிங்கத்தை வென்றாலும் போரில் ஏற்பட்ட மரணங்களை கண்டு அவன் மனம் கலங்கியது. அதனால் இனி தன் வாழ்நாளில் போரே தொடுப்பதில்லை என்று தீர்மானித்தான். போரில் வெற்றி பெறுவதைவிட சமயத்தின் மூலம் வெற்றி பெறுவதே மிகச் சிறந்தது. வெற்றியானது என்று நினைத்தான். போரினால் உருவான துக்கத்தால் அவன் மனம் கருணையின் மீது சென்றது. புத்த சமயத்தின் மீது பற்றுகொண்டு புத்த சமயத்தை தழுவி தனது வாழ்நாள் முழுவதும் அமைதிக்காக ஒதுக்கினான்.

©KTBS Not to be republished




©KTBS Not to be republished

**புத்த சமயம் மற்றும் அசோகன்**

கலிங்கப் போரிற்குப் பிறகு அசோகன் புத்த சமயத்தை தழுவினான். புத்த விக்கிரங்களுக்கு, புத்த துறவி, பிட்சுகளுக்கு தானம் செய்தான். தன்னுடைய பேரரசில் விலங்குகள், பறவைகள் பலியிடுவதை தடைசெய்தான். நாட்டு மக்கள் எல்லாம் தன்னுடைய பிள்ளைகள் என்று அறிவித்தான். பெற்றோர்களுக்கு ஆதரவாகவும் பெரியோர்களை மதித்து நடக்க வேண்டும் என்று கூறினான்.

மேலும் ஏழைகள் மற்றும் அடிமைகளிடம் கருணை காட்ட வேண்டும் என்று போதித்தான். அசோகன் தனது பேரரசில் சமய பிரசாரத்திற்காக ''தர்ம மஹாமாத்ரா''

என்ற அதிகாரிகளை நியமித்தான். பேரரசு முழுவதும் சமயத்தை பற்றி கூறும் கல்வெட்டுக்களை நிறுவினான். தன் நாடு மட்டுமல்லாது வெளிநாடுகளுக்கும் சமய பிரசாரம் செய்பவரை அனுப்பி வைத்தான். பணவாசிக்கு ரக்ஷிதா, மைசூருக்கு மகாதேவ என்ற பிரசார போதகரை அனுப்பி வைத்தான். அது மட்டுமின்றி இலங்கைக்கு தனது மகன் ரகுலன், மகள் சங்கமித்திரை ஆகியோரை அனுப்பி வைத்தான். ச.ம.பி.250ல் மூன்றாவது புத்த மாநாட்டை பாடலிபுத்திரத்தில் நடத்தினான்.

**அசோகனின் கல்வெட்டுக்கள்**



**நான்கு முகங்கள் கொண்ட சிங்கங்கள்**

அசோகனை கல்வெட்டுக்களின் தந்தை என்று அழைக்கப்படுகிறது. இதுவரை கிடைக்கப்பெற்ற கல்வெட்டுக்களில் அசோகனின் கல்வெட்டுக்களே முதன்மையான கல்வெட்டுக்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 1837ல் ஆங்கிலேய அதிகாரி ஜேம்ஸ்பிரின்சில் அவர்கள் அசோகனின் கல்வெட்டுக்களை முதன்முதலாக படித்தார். 1915 வரைக்கும் கிடைத்த அசோகனின் எல்லா கல்வெட்டுக்களையும் அவனின் பெயருக்கு பதிலாக ''தேவனாம்பிரியா'' ''ப்ரியதர்சி'' என்ற விருதுகள் மட்டும் இருந்தன. சார்லஸ் பேடன் என்ற ஆங்கிலேய என்ஜினியர் ஒருவர் 1915-ல் கர்நாடகத்தின் ராய்ச்சூர் மாவட்டத்தில் உள்ள மாசிக் என்ற இடத்தில் அசோகனின் கல்வெட்டை கண்டு பிடித்தார். இந்த கல்வெட்டில் முதன்முதலாக ''தேவனாம்பிரியா, பிரியதர்சி அசொகன்'' என்ற குறிப்பு காணப்பட்டது. இதன் காரணமாக புராணங்களில் மற்றும் புத்த இலக்கியங்களில் காணப்படும் அசோகன் மற்றும் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள தேவனாம்பிரியா, ப்ரியதர்சி என்பது ஒருவனே என்ற கருத்திற்கு வர முடிந்தது. அதன் பிறகு இன்றும் சில கல்வெட்டுக்களில் அசோகனின் பெயர் காணப்பட்டது.

கர்நாடகத்தின் சித்ரதுர்கா மாவட்டத்தில் உள்ள பர்மகிரியில் அசோகனின் கல்வெட்டுக்கள் கிடைக்கப் பெற்றுள்ளது. அசோகனின் சாரநாத் ஸ்தூபியில் பதிக்கப்பட்டுள்ள சின்னத்தை இன்று நாம் நமது இந்திய அரசின் அரச முத்திரையாக பயன்படுத்திக் கொண்டுள்ளோம். இவனின் கல்வெட்டுக்கள் இந்திய துணை கண்டம் மற்றும் ஆப்கானிஸ்தானின் 45 இடங்களில் 181 மொழிகளில் கிடைக்கப் பெற்றுள்ளன. மௌரியப் பேரரசின் பல பாகங்களில் உள்ள அசோகனின் கல்வெட்டு்கள் பிரம்மி மற்றும் 'பிரகிருத' மொழியில் உள்ளது. ஆப்கானிஸ்தானில் அராமிக் மற்றும் கிரேக்க மொழியில் உள்ளது சிறப்பாகும்.

**மௌரியர்களின் பொருளாதார அமைப்பு**

மௌரியர்களின் காலத்தில் ஏரி, குளம் மற்றும் கால்வாய் பாசன அமைப்பு சிறப்பாக இருந்ததிற்கு ஆதாரங்கள் உண்டு. சந்திரகுப்த மௌரியனின் ஆளுநராக இருந்த புஸ்யகுப்தன் குஜராத்தில் ஜனகரடு என்ற இடத்தில் ''சுதர்ஸன சரோவர'' என்ற அணையை கட்டினான். அசோகன் காலத்தில் இந்த அணைகட்டிற்கு ''துஸ்பா'' என்ற



©KTBS Not to be republished

அதிகாரி கால்வாயை ஏற்படுத்தினான். நீர்பாசன கால்வாய் பற்றி மெகஸ்தானிஸும் குறிப்பிட்டுள்ளான். விவசாயத் துறையை அரசாங்கமே நிர்வகித்தது. போர்க் கைதிகள், அடிமைகளை விவசாய வேலையில் ஈடுபடுத்தினார்கள். மௌரியர்களின் தலைநகரம் பாடலிபுத்திரத்திலிருந்து மற்ற பகுதிகளுக்கு சென்று வர நெடுஞ்சாலைகள் இருந்தன. தலைநகரிலிருந்து வைசாலி சம்பாரண்யம் வழியாக நேபாளத்திற்கு செல்லும் முக்கிய பாதை இருந்தது. நிலவரி அரசின் முக்கிய வருமானமாக இருந்தது. ''சமஹர்தா'' மற்றும் ''சன்னிதாத'' என்ற அதிகாரிகள் வரியை வசூலித்து அரசு கருவூலத்தில் சேர்த்து பாதுகாத்து வந்தனர். வெள்ளி நாணயங்கள் பழக்கத்தில் இருந்தன. இந்த காலத்தை நாகரீகத்தின் இரண்டாவது நிலை என்று வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள்.

**சமுதாய அமைப்பு**

மெகஸ்தானின் 'இண்டிகா' என்ற நூலில் மௌரியர் காலத்தின் ஏழு சாதிகளைப் பற்றிய விவரங்களை கொடுத்துள்ளது. மற்றும் எங்கும் தாசர்கள் அல்லது அடிமைகளை காணவில்லை என்று குறிப்பிட்டுள்ளது. மௌரியர் காலத்திலும் அடிமை முறை கடைபிடித்தாலும், பழங்கால கிரேக்க மற்றும் ரோம் சமுதாயத்தைப் போன்று தீவிரமாக இருக்கவில்லை. சாதிவர்ணங்களில் கடைசியான சூத்திரர்கள் மௌரியர் காலத்தில் விவசாய கூலிகளாகவும், தொழிலாளியாகவும், வீட்டுவேலை செய்பவராகவும் இருந்தனர்.

**நிர்வாக அமைப்பு**

மௌரியப் பேரரசு மத்திய ஆட்சிமுறை அமைப்பை பெற்றிருந்தது. அதிகாரம் மன்னனின் கையில் இருந்தது. அதனால் அகண்ட மௌரியப் பேரரசை ஆட்சி செய்யும் பொருட்டு இதற்கு முன்பு கண்டிரதா அளவு அதிகாரிகள் நியமிக்கப்பட்டு ஆட்சி செய்தனர். வலிமை வாய்ந்த ஒற்றர்கள் அமைப்பு ஆட்சியில் இருந்தது. மன்னனின் அதிகாரத்தின் கீழ் அமைச்சர், புரோகிதர், சேனாதிபதி மற்றும் இளவரசன் முக்கிய அதிகாரிகளாக இருந்தனர். பேரரசை பிராந்தியங்களாக (பல பகுதிகளாக) பிரிக்கப்பட்டது. பிராந்தியங்களை இளவரசன் அல்லத அரச பரிவாரத்திற்கு சம்பந்தபட்டவர்கள் ஆட்சி செய்தனர். தக்ஷசீலா, உஜ்ஜைனி, தௌயீ, சுவர்ணகிரி மற்றும் கிரினார் பிராந்தியங்களின் நிர்வாக தலைமையிடமாக இருந்தது. ராஜுக்கா (நீதி அதிகாரி) யுக்தா (தகவல்களை பதிவு செய்யும் அதிகாரி) போன்ற அதிகாரிகள் இருந்தனர். தலைநகரம் பாடலிபுத்திரத்தின் ஆட்சி நிர்வாகத்தை 30 அதிகாரிகளை கொண்டு ஆறு குழுக்களாக பிரித்து நிர்வாகம் செய்தது.

**கலை மற்றும் சிற்பக்கலை**

கலை மற்றும் சிற்பகலைக்கு மௌரியர்களின் பங்களிப்பு சிறப்பானது. மெகஸ்தானின் இண்டிகாவும், பாடலிபுத்திரத்தில் உள்ள மௌரியர்களின் ஆடம்பரமான அரண்மனைகளை குறித்து குறிப்பிட்டுள்ளது. அரண்மனை மற்றும் சுற்றுமுற்றிலுமுள்ள மரக் கோட்டையின் சில சிதலமடைந்த பகுதிகள் அகழ்வாராய்ச்சியின் போது

©KTBS Not to be republished

கிடைத்துள்ளது. அசோகன் காலத்தில் பல ஸ்தூபிகள், மற்றும் கல்தூண்கள் நிறுவப் பட்டுள்ளது. அவைகளில் இன்று கிடைத்திருக்கும் மிகப் பெரிய ஸ்தூபி சாஞ்சி ஸ்தூபி, 30-க்கும் அதிகமான தூண்கள் கிடைக்கப்பட்டுள்ளது. அவைகளை மிக நுட்பமாக பளிங்கு படுத்த்பபட்டுள்ளது. தூண்களின் மீது சிங்கம் அல்லத காளை சிற்பங்களை கடையப்பட்டுள்ளது. நம் தேசிய முத்திரையான நான்கு தலை சிங்கத்தை சாரநாத்தின் அசோக தூணிலிருந்து பெறப்பட்டுள்ளது. இவையன்றி அசோகன் பாராபர் மலை மீது மூன்று பாறைகளை குடைந்து குகைகளை (ROCK CUT CAVES) ஏற்படுத்தினான். அவன் மகன் தசரதன் நாகார்ஜுன் மலையில் மூன்று கற்குகைகளை நிறுவினான். இந்த குகைகளும் மௌரியர் காலத்து முக்கியமானதாகும்.

**குஷாணர்கள்**

கிரேக்கர்களுக்குப் பிறகு இந்திய வரலாற்றில் மேலும் கலாச்சாரத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தியவர்கள் குஷாணர்கள் ஆவர். பௌத்த மதத்திற்கு விசேஷ கவனத்தை அளித்தனர். மஹாயானம் இவர்களுடைய ஆதாரவில் அதிக முன்னுரிமைப் பெற்றது. காந்தார சிற்பகலை அவர்களால் வளர்ச்சியடைந்தது.



**காந்தார மாதரியில் புத்தர்**

மௌரியர்களுக்குப் பிறகு காணப்படும் முக்கிய அரச வம்சமே குஷாணர்களுடையதாகும். மத்திய ஆசியாவிலிருந்து இந்தியாவுக்கு குடிபெயர்ந்து வந்த நாடோடி இனத்தின் மூலம் வந்தவர்களே குஷாணர்கள். இவர்கள் யூச்சி வழிவந்தவர்கள். இதே காலத்தில் சகர்கள் மற்றும் பார்த்தியர்கள் வடமேற்கு பகுதியில் நிலைத்திருந்தனர். அயல் நாட்டு சமுதாயங்கள். குஷாணர்கள் சக மற்றும் பார்த்தியர்களை தோற்கடித்து காந்தாரப் பிரதேசத்தில் நிலைத்திருந்தனர்.

குஜலகட்பீஸஸ் இவ்வரசவம்சத்தை ஸ்தாபித்தவர். விமகட் பீஸஸ் மற்றும் கனிஷ்கர் இவ்வம்சத்தின் முக்கிய அரசர்கள். யுஜிகள் முதன்மையான பழங்குடிகளை சேர்ந்தவர்கள். இவர் இந்துகுஷ் மலைகளைக் கடந்து காபூல் மற்றும் காஷ்மீரத்திலிருந்து வந்து நிலைத்தனர். விமக்கட் பீஸஸ் காலத்தில் தங்க நாணயங்களை வெளியிட்டனர். அன்றிலிருந்து குஷாணர்கள் தங்கம் மற்றும் செம்பு நாணயங்களை அச்சிட்டனர்.

## பயிற்சிகள்

**I. கோடிட்ட இடங்களை நிறப்புக.**

1. சாணக்கியன் .............. என்று புகழ் பெற்றான்.
2. மெகஸ்தானிஸின் நூல் ............................. .
3. மௌரியர்களின் தலை நகரம் ................



©KTBS Not to be republished

4. குஷானர்களின் அரசை நிறுவியவர் .................

5. கனிஷ்காவின் புதிய ஆட்சிக் காலத்தை ......... என்று அழைப்பர்.

**II. விரிவான விடைதருக :**

1. மௌரியர்களின் வரலாற்றை விளக்கும் ஆதாரங்களை பட்டியலுடுக.
2. அசோகர் காலத்து முக்கிய நகரங்களை கூறுக.
3. அசேகனை ஒரு மகாபேரரசன் என்று வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள். விவரி?
4. அசோகனின் நிர்வாகச் சிறப்புகளை விளக்குக.
5. குஷானர்கள் எந்த பரம்பரையை சார்ந்தவர்கள்?
6. கனிஷ்கரின் ஆட்சி விரிவு எவ்வெவெவ்விடங்களுக்கு பரவியது?

**III. செயல்பாடு.**

1. காந்தாரக் கலையைப் பற்றி அறிந்து கொள்க?
2. கனிஷ்கர் காலத்தில் நடந்த புத்த மாநாடு பற்றி உங்கள் ஆசிரியரிடமிருந்து அதிக விவரங்களை பெற்றுக் கொள்க.

©KTBS
Not to be republished

பாடம் - 2

# குப்தர்கள் மற்றும் வர்த்தனர்கள்

***இப்பாடத்தைக் கற்றபின் நீங்கள் அறிவன :***

- குப்த பேரரசின் புகழ்பெற்ற அரசர்கள், அரசியல் சாதனைகள்
- குப்த பேரரசுகள் இலக்கியம் மற்றும் அறிவியலுக்கு ஆற்றிய தொண்டுகள்.
- வர்த்தமானர்களின் வளர்ச்சியும் அவர்கள் கலைக்கும் கல்விக்கும் ஆற்றிய அருந் தொண்டுகளும்.
- இந்திய வரைபடத்தில் குப்த பேரரசின் விரிந்த எல்லைகளை குறிப்பிடுக.

மௌரியர்கள் மற்றும் குஷானர்களுக்க பிறகு தோன்ளறி பேரரசே, குப்த பேரரசாகும். மௌரிய பேரரசின் அழிவிற்கு பிறகு வடக்கில் குஷானர்கள் மற்றும் தெற்கில் சதவாஹனர்கள் ஆட்சிக்கு வந்தனர். இந்த இரண்டு பேரரசுகளும் சாதார வருடம் 3-ம் நூற்றாண்டின் இடைவேளையில் முடிவுக்க வந்தனர். குப்தர்கள் தற்போதைய உத்திர பிரதேசத்தில் கனிஷ்கர்களுக்க சமமாகு இருந்தும் அவர்கள் வலிமையிழந்ததால் மௌரியர்களைப் போன்றே அகண்ட பேரரசை உருவாக்க அடித்தளம் அமைத்தனர். சாதாரண வருடம் 335 லிருந்து 455 வரைக்கும் வட இந்தியாவை ஒற்றுமையாக இருக்கச்க செய்தனர்.

குப்தர்களின் வம்சம் சாதாரண வருடம் 275 -ல் அதிகாரத்திற்க வந்தது. ஸ்ரீ குப்தன் இந்த வம்சத்தின் முதல் நிறுவனன். இவர்கள் ''ப்ரயாகா'' வில் இருந்து தங்களுடைய ஆட்சியை ஆரம்பித்தினர். குப்தர்கள் பாடலிபுத்திரத்தை தங்கள் தலைநகரமாக செய்து கொண்டார்கள். பாடலிபுத்திரம் மீண்டுமொரு முறை பெரிய பேரரசின் தலைமையிடமானது. குப்தர்கள் தங்களுடைய காலத்தின் சமயம், இலக்கியம், கலை,அறிவியல் போன்றவற்றிற்கு ஊக்கமளித்தனர்.

***ஆதாரங்கள் :***

குப்தர்கள் வரலாற்றை அறிந்து கொள்ள உதவும் ஆதாரங்கள் எதுவென்றால்...

1. அலகாபாத் தூண்கள், கல்வெட்டுகள்
2. மெகுரோலீயா தூண் கல்வெட்டுகள்
3. விசாகதத்தனின் முத்ரராக்சஸ மற்றும் தேவி சந்திர குப்தா
4. ராஜ சேகரனின் காவியப் பாடல்கள்
5. காளிதாசனின் நூல்கள்
6. கௌமதியின்விஜய்கி கொண்டாட்டம்
7. பாஹீயன் மற்றும் இத்சிங்கின் எழுத்துக்கள்.

***அறிந்து கொள்க:***

வரலாற்று ஆசிரியர் V.V.ஸ்மித் அவர்கள் குப்தர்களின் காலத்தை பொன்னான காலம் என்று அழைத்துள்ளார். ஆனால் அபிப்ராயத்தை பெரும்பாலான வரலாற்று ஆசிரியர்கள் ஏற்றுக் கொள்வதில்லை.

©KTBS Not to be republished

***அரசியல் வரலாறு :***

குப்தர்களின் முதல் வரலாறு சிறப்புமிக்கவன் என்றால் முதலாம் சந்திர குப்தனை அழைப்பார்கள். இவன் லிச்சிவி இளவரசியான குமரா தேவியை மணந்தான். இதனால் குப்தர்களின் பலம் மற்றும் புகழ் அதிகமானது. முதலாம் சந்திரகுப்தன் ச.ஸ. 319-320 ல் பட்டத்திற்கு வந்தபோது குப்த வருடம் ஆரம்பமானது.

அரசியல் நிலைத்ததன்மை இல்லாது கடந்த பலநூற்றாண்டுகளுக்குப் பிறகு கி.பி. 4 ஆம் நூற்றாண்டில் குப்தப் பேரரசு எழுந்தது. சமசுகிருத மொழியும் அதன் மாபெரும் இலக்கியவளமும் அக்காலத்தின் கண்ணாடியாய் வாழ்க்கை மக்களின் சிந்தனை, ஈடுபாடு போன்றன யாவும் வெளிப்படலாயின. அவ்வாட்சிக்கு "மகதா" (மகதம்) நகரம்தான் அடிப்படையானது. முதலாம்சந்திர குப்தர் லக்காவி இளவரசியை (Lacchavi) திருமணம் செய்து தன்நாட்டையும் ஆட்சியையும் மேலும் பலப்படுத்திக் கொண்டார். அவரின் ஆட்சித் தொடக்கமே குப்தர்களின் காலத் தொடக்கமாயிற்று என்றே கூறலாம். அதனால் அவர் மகாராஜாதிராஜா என்றே அழைக்கப்பட்டார்.

அவருக்குப்பின் சமுத்திரகுப்தன் என்ற அவரின் மகன் ஆட்சிப் பொறுப்பேற்றார். அப்பெருமகனின் வெற்றி வாகைகள் "அலாகாபாத் பிரசதி" (Alahabad Prashati) என்ற நூலினை ஹரிசேனா எழுதினார். இந்நூலைக் கொண்டு செய்திகளை அறியலாம். சமசுகிருத மொழியிலேயே முழுவதும் எழுதப்பட்டு அசோகரின் கல்தூணிலும் பொறிக்கப் பட்டுள்ளது. சமுத்திரகுப்தரின் ஆட்சிக் காலத்தில் தான் இந்தியாவின் பெரும்பகுதி முழுவதும் ஒன்றாக்கப் பட்டது. அவரின் அசுவமேதயாகம் தான். வேதங்களின் (rituals) மரபுகளையும் நமக்கு உணர்த்துகிறது. சமுத்திரகுப்தர் வெறுமனே பேராண்மை படைத்தவர் மட்டுமல்லாமல் மாபெரும் கவிஞராகவும் இசைக் கலையின் மீது நாட்டம் கொண்ட வராகவும் விளங்கினார். இவரின் இசைப் பேரார்வத்தை வெளியிடும் விதமாகத்தான் அவர் காலத்திய பொன் நாணயத்தில் வீணை வாசிப்பதைப் போன்ற உருவம் பொறிக்கப்பட்டுள்ளதைக்காணலாம்.

***அறிந்து கொள்:*** டெல்லியல் குதுப்மினாருக்கு அருகிலுள்ள மெஹ்ருள்ளியில் உள்ள இரும்புத்தூண் மிகவும் சிறப்பு வாய்ந்தது. அது 23 அடியும் 8 அங்குல உயரமும் 6,000 கிலோ எடையும் கொண்ட மிகப் பெரும் தூண் ஆகும். அக்காலத்திய மிகச்சிறந்த தொழில் நுட்பத்துக்கு சான்றான ஒன்றாகும். இன்றுவரை அது துரு பிடிக்கவில்லை. அக்காலத்தில் இந்தியர்கள் மிகசிறந்த இரும்பு தொழில் நுட்பம் கொண்டிருந்தனர் என காட்டுகிறது.




மெஹ்ரு இரும்புத் தூண்.

© KTBS Not to be republished

### சமுத்திர குப்தன் (ஸா - ச - 335 -380)

சந்திர குப்தனுக்குப் பிறகு அவனுடைய மகன் சமுத்திர குப்தன் அரசுரிமைப் பெற்றதைக் காண்கிறோம். ஹரிசேனன் எழுதிய அலகாபாத் விருதுகளால் அவனுடைய சாதனங்கள் இறவா வரம் பெற்றவை. இது சமஸ்கிருத மௌழியில் உள்ளது. அசோகனின் துண்கள் ஒன்றின் மீது செதுக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் பலபாகங்களில் இவன் காலத்தின் குப்தர்களுடைய ஆட்சிக்குப்பட்டு இருந்தன. இவன் அஸ்வமேதயாகத்தை பழைய வைதீக முறைப்படி விதிகளுக்குட்பட்டு நடத்தினான். சமுத்திரகுப்தன் ஆக்கிரமிப்பாளன் அல்ல. இவன் மகா கவிஞன் மற்றும் இசைப்பிரியனாகவும் இருந்தான். இவன் இசையின் மீது கொண்டிருந்த பற்று அவன் காலத்திய பொன் நாணயங்களில் வீணையை மீட்டும் படத்தின் மூலமாக நாம் காண முடிகிறது.




### இரண்டாவது சந்திர குப்தன் (ஸா. சி. 380-412)

சமுத்திர குப்தனின் பேரரசை இரண்டாவது சந்திரகுப்தன் பெருமளவில் விரிவாக்கினான். இவன் சகர்களை தோற்கடித்து மேற்கு இந்தியாவை அனேக அரச வம்சங்களுடன் இவன் திருமணம் மூலமாக சம்பந்தங்களை ஏற்படுத்திக் கொண்டு புகழ்பெற்று விக்கிரமாதித்தன் என்னும் பட்டப் பெயர் பெற்றான். இவன் காலத்தில் போர்களை விட இலக்கியம் மற்றும் கலைகளுக்கு அளித்த ஆதரவு நினைவு கூறப்பட்டுள்ளது. புகழ் பெற்ற சமஸ்கிருத கவிஞர் மற்றும் நாடகாசிரியரான காளிதாசர் இவன் காலத்தைச் சேர்ந்தவராவர். மேகதூதம், குமார சம்பவம் மற்றும் ருது சம்ஹாரம் முலியன அவருடைய காவியங்களாகும். அபிஞான சாகுந்தலம் அவருடைய புகழ் பெற்ற நாட்கங்களில் ஒன்றாகும். சூத்ரகனின் பிருச்சகட்டிக்க மற்றும் விசாகத்தனின் முத்ரராக்ஷச இக்காலத்திய மற்ற இலக்கியங்களாகும்.



©KTBS Not to be republished

**அறிந்து கொள்**

**மேகதூதம் :–** காளிதாசரின் கவிதைப்படைப்பில் மிளிரும் காவியம்; மிகப்புகழ்பெற்ற இலக்கியச் செல்வம் இம்மேகதூதம் தான். குபேரன் என்ற அரசன், ஒரு யக்ஷன், தன் கடமையைச் செய்யாததினால் அவனைத் தன்நாட்டிலிருந்து வெளியேற்றுகிறான். அச்சூழலில் அந்த யக்ஷன் வானில செல்லுகின்ற மேகத்தைத் தடுத்து நிறுத்தி கைலாச மலைப்பக்கம் வாழும் தன் மனைவிக்குச் சொல்லவேண்டிய செய்தியை அம்மேகத்திடம் சொல்லித் தூது அனுப்புகிறான். தன் மனைவிவாழும் இடத்தின் இயற்கைப் பேரெழிலைத் தன் தூதனாகிய மேகத்திடம் விளக்கிக் கூறுவதே "மேகதூதம்". இன்றும் என்றும் இப்புகழ்க் காவியம் உலகம் முழுவதும் போற்றப்படும் ஒன்றாகும். இந்திய மொழிகள் எல்லாவற்றிலும் மொழிபெயர்க்கப்பட்டும் உலகப் பெருமொழிகள் அனைத்திலும் கூட மொழிபெயர்க்கப்பட்டுள்ளது என்ற பெருமை கொண்டதாகும். கற்றோர் அனைவரும் இன்றுவரைகூட இக் காவியத்தின் நாடகப்பாங்கினை உளமாரப் பாரட்டியுள்ளர் என்றால் அது காளிதாசரின் பெருமையை நாமும் பெறுகிறோம் என்ற மகிழ்ச்சியாகும்.


சமுத்திரகுப்தரின் ஆட்சிப் பரப்பை மேலும் விரிவுபடுத்தியும் நிலையான ஆட்சியையும் ஏற்படுத்திக் கொடுத்தவர் இரண்டாம் சமுத்திரகுப்தர் என்பவர்தான். அவர்தான் 'சாகா'க் களைத் தோற்கடித்து இந்தியாவின் தெற்குப் பரப்பினைத் தன் குப்த பேரரசுடன் இணைத்து விரிவு படுத்தினார். அவரே இந்திய அரச குடும்பங்களுடன் நட்புறவைத் திருமண உறவுக்கும் உயர்த்தி மிகப் பெரும் வல்லமையும் எல்லோருக்கும் தெரிந்தவராகவும் உயர்ந்தார். அத்தகு பெருமையால் "விக்ரமாதித்யன்" என்ற பட்டப்பெயரையும் அடைந்தார். அவரின் ஆட்சி போர்த் தூண்டல்களுக்குக் கொடுக்கப்படும் ஊக்கத்தைவிடகலை இலக்கியங்களுக்குப் பேரூக்கம் அளித்து வரலாற்றில் உன்னதமான இடத்தைப்பிடித்தார் என்றால் அது மிகையாகாது. சமசுகிருதத்தின் மிகச்சிறந்த கவிஞரும் நாடகவல்லுநருமான காளிதாதர் இவ்விரண்டாம் சந்திரகுப்தரின் காலத்தில்தான் வாழ்ந்தார். மேகதூதம், இரகுவம்சம், குமாரசம்பவம், மற்றும் நிதுசம்ஹார போன்றன அனைத்தும் காளிதாசரின் கவிதைப் படைப்புக்களாகும். "அபிஞான சகுந்தலா" ஒரு குறிப்பிடத்தக்க நாடகம்தான் அவருடைய சிறந்ததோர் இலக்கியமாகும். அக்காலக் கட்டத்தில்தான் சுதர்க்காவின் மிருச்சகடிகம், விசாகதத்தரின் "முத்ராராக்ஷசா" (Mudrarakshasa) போன்ற இலக்கியங்களும் தோன்றின.

**அபிஞான சகுந்தலா**

சாகுந்தலமே காளிதாசரின் மிகச் சிறந்த நாடக மாகும். இக்கதை மகாபாரதத்தில் வரும் ஒரு பகுதியாகும். அரசன் துஷ்யந்தன் காட்டில் வேட்டையாடச் சென்றபோது கன்வ மகாமுனிவரின் ஆசிரமத்திற்கு வருகிறான். அங்கே சகுந்தலையைக் காண்கின்றான், அவள் மீது காதல் கொள்கின்றான். காந்தர்வ முறையில் திருமணமும் நடக்கிறது. இந்நிகழ்வுகள் அனைத்தும் கன்வமுனிவர் இல்லாதபோதுதான் நடந்தேறின. சிலகாலம் கடந்தபின் துஷ்யந்தன் சகுந்தலையையும் ஆசிரமத்தையும் துறந்து

© KTBS Not to be republished

தன்தலைநகர் செல்லவேண்டியதாகிறது. இப்பிரிவுக்காலத்தின் போதுதான் துர்வாசர் என்னும் முனிவர் கன்வரின் ஆசிரமத்திற்கு வருகிறார். சகுந்தலா, துஷ்யந்தனைப் பற்றிய கனவுலகத்தில் மனதை அலையவிட்டுக் கொண்டே இருந்ததால் துர்வாசரின் வரவையும் அவரை வரவேற்றுத்தம்ஆசிரமத்திற்குள் போற்றிச் செய்யும் விருந்தினர்க்கான கடமையையும் மறந்தபடி இருக்கிறாள். துர்வாசமுனிவர் தம் இயல்பிற்கேயுரிய கோபக்கனல் தெறிக்குமாறு சகுந்தலாவிற்குச் சாபம் இடுகிறார். "நீ இப்போது யாரைப்பற்றி நினைத்து உருகிக் கொண்டுள்ளாயோ அவர் உன்னையே மறப்பராவார்" என்றே சபித்து விடுகிறார். பின்னர் தான் இட்ட சாபத்தின் தீவிரமான கொடுமையை எண்ணி அவரே மனமிரங்கி அச்சாபத்திற்கான விமோசன வழியையும் பகர்கிறார். சகுந்தலாவிற்குத் "துஷ்யந்தனால் கொடுக்கப்பட்ட ஏதாவதோர் பரிசினைக் காண்பித்தால் அவன் மீண்டும் எல்லாத் தொடர்புகளையும் நினைவுச் சரத்திற்குக் கொணர்வான்; நீவீர் துன்பம் தீர்வீர்" என்றார். துஷ்யந்தன் கொடுத்த பரிசுப் பொருள் ஒரு மோதிரம். துர்வாசர் கூறியவாறே துஷ்யந்தன் சகுந்தலையை மறக்கிறான். அவள் கருவுற்றதும் கன்வமுனிவர் துஷ்யந்தனின் அரசவைக்கு அவ்விருவரையும் ஒன்று சேர்த்து வாழவைக்க அழைத்துச் செல்கிறார். செல்லும் வழியில் ஆற்றினைக் கடக்கும் நேரத்தில் துஷ்யந்தன் அளித்த பரிசான மோதிரத்தை (மீண்டும் நினைவுகூரத்தக்கதோர் மோதிரம்) இழந்து விடுகிறாள். அரசவையில் கன்வ முனிவர் பலவாறு எடுத்துக் கூறியும் நினைவு படுத்த முயன்றும் துஷ்யந்தன் சகுந்தலையோடு வாழ்ந்ததை துர்வாசரின் சாபத்தால் மறந்தொழிந்தவனாகவே தொடர்பேயில்லாதவரைப் பார்ப்பதுபோல் பார்க்கின்றான்; பேசுகின்றான். சகுந்தலை தான் அவமானமுற்ற துன்பநிலையிலேயே அரண்மனையில் இருந்து வெளியேறுகிறாள். சிலநாட்கள் பொறுத்து அம்மோதிரம் மீனின் வயிற்றிலிருந்து கிடைக்கப்பெறுகிறது. அம்மோதிரத்தைப் பார்த்ததும் அவன் நினைவுச் சரம் தொடர்ந்து உயிர்பெற்று அனைத்தையும் நினைவு கொள்கிறான். பேரானந்தம் அடைகிறான். சில காலம் பொறுத்து அவன் ஒரு பயணத்திலிருந்து தன் நாடு திரும்பும்போது "மரிச்சா" என்னும் முனிவரின் ஆசிரமத்திற்கு வருகை தந்தபோது அங்கு ஒரு சிறுவன், குட்டிச் சிங்கத்துடன் விளையாடு வதைக் காண்கிறான். அச்சிறுவன் யார் என்றும் அவன் பின்புலம் என்னவென்றும் அறிந்ததும் தன் உணர்வில் அச்சிறுவன் தன்மகனே என்றும் "சர்வத்தாமன்" என்ற பெயரினன் என்றும் உணர்ந்து பூரிப்படைகிறான். இவ்வாறாக துஷ்யந்தனும் அவன் மனைவியான சகுந்தலையையும் குழந்தையையும் சேர்த்துக் கொண்டு வாழ்கிறான். அபிஞான சகுந்தலா மிகச்சிறந்த நாடகப் பேரிலக்கியமாக இன்றளவும் உலகில் வலம் வருகிறது.



சகுந்தலா

இக்காலக் கட்டத்தில்தான் மேற்குநாட்டாரோடு குப்தர்கள் கொண்டிருந்த வாணிபத் தொடர்பு வீழ்ச்சியடைந்தது. அதன் தொடர்ச்சியாய் அவர்களின் பொருளாதார அமைப்புகளும் நலிவுற்றன. அவர்களின் பேராட்சியின் நிலைகுலைவுகளும் மேற்கூறிய இடர்ப்பாடுகளும் சேர்ந்து அவர்களின் உள்நாட்டு வாணிபங்களைக் தடைப்படுத்தியும் வீழ்ச்சியுறும் நிலைக்கும் தள்ளப்பட்டன. கிராமங்களில் மட்டுமே வாணிபம், வியாபாரமாய் சுருங்கிப் போனது. இத்தகு காரணங்களால்-நலிந்த வாணிபத்தால் நகரங்களின் மையகத்தன்மைகள் பேரிழப்புக்குள்ளாயின. 'பாடலிபுத்ரா' என்ற பெருநகரம் பெரும்பாடுற்று சிறுகிராமம் போல் சிறுத்துப்போயிற்று.

©KTBS Not to be republished

ஆட்சிக்குலைவு ஏற்பட்ட இக்காலக் கட்டந்தான் இறைவணக்கமும் மதப்பெரு நூல்களும் சிறந்தோங்கிய காலமாகவும் போற்றப்பட்டது. புராணங்களும் வராகமிகிரா, பாஸ்கரா, ஆரியபட்டா, சரக்கா, மற்றும் சுஸ்ருஷ்டா (Sushruta) போன்ற பெரும் அறிவியல் அறிஞர்கள் தோன்றிய காலமாகவும் விளங்கியது. பாஸ்கராவும் ஆரியபட்டாவும் சோதிடவியலிலும் வானியலிலும் கணக்கியலிலும் பெருஞ்சாதனையும் தொண்டும் புரிந்தார்கள். சர்க்கா என்பவர் 'சரக்காசம் ஹிட்டா' என்ற நூலை எழுதினார். சுஸ்ருஷ்டா, "சுஸ்ருஷ்டா சம்ஹிட்டா" என்ற "அறுவை மருத்துவமுறை" என்ற நூலையும் எழுதினார்.

***குப்தர்கள் காலத்திய அறிவியல் அறிஞர்கள்***

1. ***தன்வந்தரி :–*** இவர்மருத்துவத் துறையில் பேறிஞராவர். ஆயுர்வேத மருத்துவத்தில் தனிச்சிறப்பு வாய்ந்தவராய் விளங்கினார். இவரே இந்திய மருத்துவத் துறைக்கு தந்தையாவார். இவரின் மருத்துவத் தொண்டு யாதெனில் ஆயுர்வேத அகராதிதான்

2. ***சரக்கா :–*** இவரும் மருத்துவஞானிதான். இவரின் பெருந்தொண்டு யாதெனில் மருத்துவ உலகிற்குக் "கிடைத்த சரக்கா சம்ஹிட்டா" தான்.

3. ***சுஸ்ருஷ்டா :*** இவர் ஓர் அறுவை மருத்துவ வல்லுநர். இவரே முதல் அறுவை மருத்துவ முறைக்கு அறுவை முறைகளை வழங்கியவர். இவர் அக்காலத்திலேயே இச்செய்திகளைத் தொகுத்துப்பதிவும் செய்துள்ளார். போர்ப்படை வீரர்களுக்கென்றே அறுவை மருத்துவமுறையில் தனிப் பிரிவைக் கொண்டிருந்ததாக நாம் அறிகிறோம். அறுவை முறைகளைப் பற்றி விளக்கமாக எழுதியுள்ள இவர் முறைகள், இன்றைய அறுவை மருத்துவ முறைகளுக்கு ஒப்பாயும் ஏற்புடைத்தாயும் உள்ளதை நினைக்கும்போது வியப்பின் உச்சிக்கே நாம் சென்றடைகிறோம்.

4. ***ஆரியபட்டா :–*** இவர் மிகப் புகழ்வாய்ந்த வானியலாளரும் கணிதவியலாளரும் ஆவார். வராக மிகிரா என்னும் முதன்மை வாய்ந்த அறிவியலாளருக்கு அடுத்துவந்த அறிவியல் அறிஞர் ஆரியபட்டா ஆவார். இவரின் மிகமேன்மையான அறிவியல் கொள்கையின் அடிப்படையிலேயே இந்திய நடுவண் அரசு (Central Govt.) மாபெரும் அறிவியல் அறிஞருக்கான பட்டத்திற்கு "ஆரியபட்டா பரிசு" (Aryabatta Award) எனவழங்கி வருகிறது. இந்தியாவின் மேன்மைக்குரிய செயற்கைத் துணைக் கோளிற்கு (Satellites) "ஆரியபட்டா" என்று இவர் பெயரையே வைத்து இவரின் அறிவியலுக்கு நினைவினிய நன்றியறிதலைச் செய்கிறோம். இவர்தான் "0" வைக் கண்டறிந்த மேதை என்று நம்பப் படுகிறது. இவரே அல்ஜீப்ரா (Algebra) என்கிற கணிதவியல் துறைக்கு இந்தியாவின் முதன்மையான அறிவியல் அறிஞராவார். இவர்தான் சூரிய ஒளிமறைவும் (சூரிய கிராணம்) (Solar Eclipse) சந்திர ஒளிமறைவும் (சந்திர கிராகணம்) (Lunar Eclipse) ராகுவால் நடைபெறுவதில்லை என்றும் பூமி, சூரியனைச் சுற்றிவரும் சுழற்சியினால் தான் நடைபெறுகின்றன என்றும் உறுதிபடுத்திப் புராணக் கதையின் பொய்மைப் புனைவை நீக்கிட அரும்பாடு பட்டவர்.

©KTBS Not to be republished

*5.* ***வராகமிகிரா :*** *இவரும் மிகச் சிறந்த வானியலாளராவார். வானியல் பற்றிய "பஞ்ச சித்தாந்திகா" என்ற நூலினை எழுதிச் சென்றார். இந்நூல் "வானியல் பைபிள்" என்றே பாராட்டப் பெற்றது. இதற்கு மேலும் புருகத் சம்ஹிட்டா; "ப்ருகத் சடக்கா"; "லகுசடக்க" என்ற பல நூல்களையும் எழுதினார். வானியல், சோதிடவியல், புவியியல் போன்ற பல்வேறுகலைகளின் மிகச்சிறந்த அறிஞர் பெருமகனாக விளங்கினார்.*

## *வார்த்தனர்கள்*

*குப்தர்கள் பேரரசு ஏறத்தாழ இரண்டு நூற்றாண்டுகள் ஆட்சியில் இருந்தார்கள். கி.பி **6** ஆம் நூர்றாண்டில் அவர்களுக்குள் ஒற்றுமைக் குறைவு பெருகியதால் சிதைந்தனர். இதன்பிறகு பல்வேறு அரசுகள் முளை விட்டுப் படர்ந்தன. அவற்றுள் ஒன்றே "வார்த்தனர்கள்" என்ற அரசாகும். இவர்கள் கி.பி **6** ஆம் நூற்றான்டில் தானேஸ்வர் என்ற இடத்திலிருந்து ஆட்சி செய்தனர்.*

*சில செப்பேட்டுச் செய்திகளும் பாணா என்பவரின் ஹர்ஷ சரிதாவிலும் சீனப் பயணியான "யுவான் சுவாங்" என்பவரின் எழுத்துக் களாலும் இவ்வாட்சி பற்றிய செய்திகள் வெளிச்சத்துக்கு வருகின்றன.*

*இவ்வாட்சிப் பரம்பரையை நிறுவியவர் புஷ்யபூதி என்பவரேயாவார். பிரபாகரா வார்த்தனா மற்றும் ஹர்ஷவர்த்தனா போன்ற இருவரும் புகழ்பெற்ற மன்னர்கள் ஆவர். ஹர்ஷவர்த்தனாவின் தந்தையான ப்ரபாகரவர்த்தனாவும் அவரது சகோதரரான ராஜவர்த்தனாவும் இறந்தபின்பு ஹர்ஷவர்த்தனா தானேஷ்வரின் ஆட்சிப் பொறுப்பேற்றார். இவரின் சகோதரியை கனோஜ் மன்னருக்கு மணம் செய்து வைத்தார். வங்காள மன்னர் சஷாங்காவால் கனோஜ் மன்னர் கொல்லப்பட்ட பின்பு ஹர்ஷா கனோஜையும் கைப்பற்றி வங்காள நாட்டை எதிர்த்தார். வங்காளமும் மகதாவும் இவரது ஆட்சிக்கே உட்பட்டுப் போயிற்று. ஆனால் நர்மதாவுக்கும் மேலே தெற்குப் பக்கம் இவரால் செல்ல முடியவில்லை. கன்னட மன்னர் சாளுக்கிய இரண்டாம் புலிகேசி ஹர்ஷாவின் முன்னேற்றத்தைத் தடுத்து பின்னடையச் செய்தார். அரசவைப் புலவரான இரவி கீர்த்தியின் "பனேகைரிக்"* (Panegyaric) *என்ற பிரஷஸ்தி* (Prashasti) *புகழ்மொழி நூலால் இரண்டாம் புலிகேசியின் சாதனை அழியாப் புகழுக்குரியதாயிற்று. அவர்தம் மொழியின் வல்லமையால் ஹர்ஷாவின் மகிழ்ச்சி இப்படுதோல்வியால் வறண்ட பாலை நிலம் போலாயிற்று எனலாம்.*

*மன்னரின் ஆட்சிக்கு அமைச்சர்கள் குழுக்கள் பேருதவி புரிந்தன. ஆட்சிக் குழுவில் (ஆளும் வகுப்பு) மகாசந்திவிக்ரஹா (இணைப்பாளர்கள்* Negotiator*) மகாபாலதி க்ருத்தா (தளபதி) போகபதி (வரிவிதிக்கும் அலுவலர்கள்) மற்றும் தூதர்கள் போன்றோர் அடங்குவர். இவ்வரசு பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது. நிலவரிவிதிப்பே அரசாட்சிக்குத் தலையாய வருவாயாக இருந்தது. துணை மன்னர்கள்* (tributary Kings) *இம் மன்னருக்குக் கப்பமாகப் பணம் செலுத்தினர். அவர்களுக்கு மன்னரும் நிலக் கொடை* (Grant of land) *அளித்துப் பதிலாகப் படைகளைத் துணையாக்கிக் கொள்வான். அரசன், தன் ஆட்சியில் வலிமை குறைந்த நிலையடைந்ததும் அவ்வளவு துணை மன்னர்களும் சுதந்தரம் பெற்றனர்.*



©KTBS Not to be republished

மற்ற சமுதாயத் தினருக்கும் மதத்தவருக்கும் நிலங்கள் கொடையாக வழங்கப்பட்டன. ஹர்ஷ மன்னன் புத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்கினார். யுவான் சுவாங் புத்த மதத்தைப் பற்றியனவாகத் தம்குறிப்புகளில் பாராட்டி எழுதியுள்ளதைக் காணும்போது ஹர்ஷ மன்னரின் காலத்தில் புத்த மதத்திற்கு இருந்த பெருமைகளை அறிய முடிகிறது. புத்த மதத்தவரின் நாளந்தாப் பல்கலைக் கழகம் நிறைவும் முழுமையுமான செயல் பாடுகளில் ஹர்ஷர் காலத்தில் செய்ததாகக் குறிப்புகள் உள்ளன. அரசின் முழுமையான அன்பினிய அரவணைப் பில் நாளந்தாப் பல்கலைக்கழகம் திளைத்திருந்தது.

**நாளந்தா**



நாளந்தா

புத்தரின் தொண்டர்கள், வழிமரபுப் பின் பற்றாளர்கள் (Followers) போன்றோர் அனைவரும் புத்தர் தம முன் பிறவியில் "நாளந்தா" என்று பெயர் பெற்றிருந்தார் என்ற நம்பிக்கையிலேயே நாளந்தா பல்கலைக்கழகம் என்ற பெயர் வந்ததாம். காலத்தால் முந்திய பழமையான பல்கலைக்கழகம் இதுவேயாகும். நாளந்தாவிற்குப் புத்தரே வருகை தந்திருந்தார். நாளந்தாவிற்கு 25 மீட்டர் உயரமான புத்தரின் வெண்கலச் சிலையை ஹர்ஷவர்த்தனர் பரிசளித்திருந்தார். குமாரகுப்தர் ஓவியக்கலைப் பள்ளியையே நன் கொடையாய் வழங்கியதாகவும் நாகார்ஜுனா என்பவரே சட்ட ஆலோசகராகவும் நன்னெறியாளராகவும் இருந்ததாகக் கூறப் படுகிறது. தின்னாகா, தர்மபாலா என்ற இரு அறிஞர் பெருமக்கள் புகழ் பெற்று விளங்கினர். சீனப் பயணி யுவான் சுவாங் இப்பல்கலைக் கழகத்திற்கு வருகைதந்து சில காலம் தங்கியிருந்ததாகவும் வரலாறு கூறுகிறது. அவரே இவ்விடத்தின் அருமை பெருமைகளை மொழிந்து உலகிற்குத் தெரிவித் துள்ளார். அவ்விடத்தில் தூண்களும் கல்விக் கூடங்களும் (Chaitya-Viharas) ஓய்வு மனைகளும், படிகள் அங்கும் இங்குமாக அமர்வதற்கும் சிறுஓய்வு கொள்ளவும், நோன்புமிகுதியான அறைகளும் விரிவுரை அறைகளும் இன்னும் பல்வேறான அறைகளும், விளங்கியிருந்த சிறப்புகொண்டு அப்பல்கலைக்கழகத்தின் பெருமையையும் உயர்வும் அறிந்துகொள்ளலாம். அசோகார், குப்த மன்னர்கள் மற்றும் ஹர்க்ஷவர்தனர் போன்றோர் அனைவரும் இப் பல்கலைக் கழகத் திற்குப் பெருமளவில் பேராதரவை அளித்துள்ளனர். திடீரென ஏற்பட்ட தீயினால் பல்வேறு நூல்கள் எரிந்து போயினவாம்.

© NIE Not to be republished

### *பயிற்சிகள் :*

**I. *ஏற்புடைய சொற்களைக் கொண்டு கீழ்க்காணும் வாக்கியங்களை நிரப்புக.***

1. குப்தர்கள் தங்கள் ஆட்சியை ____________ என்ற இடத்திலிருந்துதான் தொடங்கினர்.
2. முதலாம் சந்திரகுப்தன் ____________ என்றவாறு அழைக்கப் பட்டார்.
3. ____________ என்பது காளிதாசரின் மிகப் பெரும் நாடகங்களில் ஒன்று.
4. விசாக தத்தரின் மிகச்சிறந்த இலக்கிய நூல் ____________ ஆகும்.
5. சுதர்க்கா என்பவர் எழுதிய இலக்கியப்படைப்பு ____________.
6. வார்த்தனாப் பரம்பரையைத் தோற்று வித்தவர் ____________.

**II. *வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளை எழுதுக.***

1. இரண்டாம் சந்திரகுப்தரைப் பற்றி குறிப்புக்களை எழுதுக.
2. குப்தர் பேரரசு வீழ்ச்சியடைந்தமைக்கான காரணங்கள் யாவை?
3. குப்தர்கள் காலத்திய அறிவியல் அறிஞர்களின் பெயர்களை எழுதுக.
4. வர்த்தனர்களின் ஆட்சியின் நிருவாகம் எவ்வாறு அமைந்திருந்தது?

**III. *செயல் பாடுகள் :***

1. காளிதாசரின் படைப்பு பற்றிய செய்திகள் அனைத்தையும் தொகுக்கவும்.
2. குப்தர்கள் காலத்திய அறிவியல் அறிஞர்களின் புகைப் படங்களையும் செய்திகளையும் தொகுக்கவும்.

✽ ✽ ✽ ✽ ✽

©KTBS
Not to be republished

பாடம் - 3

# தென்னிந்தியா சாதவாகனர், கடம்பர், கங்கர்

## (கி.மு. 300–ல் இருந்து கி.பி 1300 வரை)

***இப்பாடத்தைக் கற்றபின் நீங்கள் அறிவன :***

- தென்னிந்தியாவில் சாதவாகனர்களின் முன்னேற்றமும் சாதனைகளும் நிருவாகமும் கலைகளும் மற்றும் கட்டடக்கலையின் சிறப்புகளும் பற்றி அறிதல்.
- சதகர்னியின் சாதனைகள்.
- கருநாடகத்தில் கடம்பர்கள் முதன் முதலாக ஏற்படுத்திய பேரரசு.
- கங்கப்பேரரசு நிறுவியது பற்றி, அவர்கள் கலை, கட்டடக்கலைக்கும் இலக்கியத்திற்கும் ஆற்றிய அரும் பெரும்தொண்டுகள்.
- சாதவாகனர்கள், கடம்பர்கள், கங்கர்கள் போன்றோரின் ஆட்சிப்பகுதிகளை இந்திய வரைபடத்தில் குறித்தல்.

விந்திய மலைகளே இந்தியாவை வடக்கு தெற்கு என்று பிரிக்கிறது. விந்திய மலையிலிருந்து கன்னியாக் குமரிவரையிலும் உள்ள இடைப்பட்ட பகுதியே தென்னிந்தியா அல்லது தட்சிணப் பகுதி என்று அழைக்கப் படுகிறது. இப்பகுதியை ஆட்சி செய்தவர்களாக சாதவாகனர்கள், கடம்பர்கள், கங்கர்கள், சாளுக்கியர்கள், இராட்டிர கூடர்கள் மற்றும் பல்லவர்கள் என்ற குறிப்பிட்ட பரம்பரையினரே ஆவர்.

### சாதவாகனர்கள் (கி.மு 230 – லிருந்து கி.பி. 220 வரை)

தட்சிணப்பகுதியில் சாதவாகனர்களே முதன் முதலாக ஆட்சியமைக்க முயன்றனர். சந்திர குப்தரின் காலத்தில் இச்சாத வாகனர்கள் துணை மன்னர்களாகக் கப்பம் கட்டிக் கோதாவரியிலிருந்து கிருஷ்ணா ஆறு வரையிலான நிலப்பகுதியை ஆட்சியில் தக்க வைத்துக் கொண்டனர். கி.மு 220 ல் சிம்முக என்போன் சுதந்தரமாக சிரிகாகுலத்தைத் தலை நகராக்கிக் கொண்டான்.

***கௌதமி புத்ரா ஷதகர்னி :*** இந்த அரச மரபில் முதன்மையானவன் கௌதமி புத்ரா ஷதகர்னி, இந்திய எல்லைக்கு அப்பால் கொடிய பகைவர்களைத் துரத்தினான் இந்துக்களால் இன்று போற்றப்படும். ‘சாலிவாகன சகா’ வருடம் என்ற காலக் கணக்கின் முறை இம்மன்னனால் தொடங்கப்பட்டது.

இவன். தன் ஆட்சி எல்லையைக் கொங்கன், பிரார், சௌராட்டிரா மற்றும் மாள்வா மற்றும் பல பகுதிகளையும் உள்ளடக்கி விரிவு செய்துகொண்டான். இவன், பெரும் பட்டப் பெயர்களான திரிசமுத்ரா டொயாபிதவாகனா (Trisamudratoya pitavahana) ஷதாவாகனா என்றும் மற்றும் குலயாஷா பிரதிஷ்டாபனாகாரா (Kulayasha pratishta panakara), ஷதகர்னி என்பவன்தான் இப்பரரம்பரையின் கடைசி மன்னன். இவன் ஆட்சிக்காலத்தில் ஷாக்ஷபுரா (Shakshapura) தொடர்ந்து தாக்குதலுக்கு உள்ளாகிச் சிதைந்து பிளவுபட்டது

©KTBS Not to be republished

சாதவாகனர்களின் ஆட்சியின்போது அரசனே முதன்மையான ஆட்சியாளன். மன்னராட்சியின் பரப்பு பல மாவட்டங்களாகப்பிரிக்கப் பட்டு சமுதாயக் குழுக்கள் (republics - குடியரசுகள்) என்ற பெயரில் எளிய நிருவாக அமைப்பிற்காக பல்வேறு அலுவலர்களை அமர்த்தி மேற்பார்வையும் ஆட்சியும் மேற்கொள்ளப் பட்டன. நகரங்களும் ஊர்களும் தன்னாட்சி அமைப்புக் குழுக்களால் (Self-governing Organizations) செயல்பாடுகள் நிறைவேற்றிக் கொள்ளப்பட்டன.

சமுதாயத்தில் நிறவேறுபாடுகளின்றி வாழ்க்கை நடத்தப் பட்டது. பெண்களும் உயர்ந்த பணிப் பொருப்புக் களில் செயலாற்றிதம் தன்மானம் வொற்றி வாழ்ந்தனர். மக்கள்தம் இயல்பான வாழ்வில் பல்வேறு தொழில் செய்யவர்களாக உழவர்கள், எழுத்தர்கள், வாணிகர் பொற்கொல்லர், மீனவர், தச்சர், நெசவுத் தொழிலாளர், மருத்துவர் என்ற நிலைகளில் வாழ்ந்தனர். பணிப் பொறுப்புகளில் இருந்த அலுவலக மக்களுள் படிநிலை மரபு (hierarchy) நிலவி பதவிகளும் வியாபாரக் குழுக்களுமாகச் செயல்பட்டது. இப்போதுகூட நாம் காணும்படி வியாபாரக் குழுக்களில் இத்தகு படிநிலைமரபு பின்பற்றப் பட்டுப் பணிகள் நிறைவேறுகின்றன அல்லவா? வாணிகம் செழித்தோங்கி வளமையுற்றது. மேல் நாட்டு வாணிகத்திற்கும் ஊக்கம் அளிக்கப்பட்டது. இதன் வழி நாசிக், கல்யாண், புரோச், பட்கல் போன்றன வாணிக மையங்களாக விளங்கின.



கார்லேவிலுள்ள சைத்தியாலயம்

சாதவாகனர்கள் வேதமரபைப் பின் பற்றி வாழ்ந்தனர்; இருந்தும் பிற மதங்களான சமணம் (Jainism), புத்தமதம், போன்றனவும் ஒத்திசைவுடன் (Harmony) சிறப்புடன் விளங்கின.

அவர்கள் கலை, இலக்கியம், கல்வி போன்றவற்றிற்கு உயர்வு கொடுத்துப் போற்றினர். பிராகிருத மொழியிலேயே இலக்கியங்கள் இயற்றப்பட்டன; இரு மொழிப்பேரறிஞர்களும் பொதுமக்களும் கதாசப்தஷதி (Gathasaptashati) என்ற நூலினை ஹாலா என்பவர் எழுதியதே இதற்கான அருமையான சான்றாகும்.

அஜந்தா ஓவியங்களும் அமராவதி ஓவியங்களும் சாதவாகனர் களாலேயே தொடங்கப்பெற்றன. அரண்மனைகள், கோயில்கள், விகாரங்கள், சைத்யாலாய்க்கள் மற்றும் கோட்டைகள் போன்றனவும் கட்டப்பட்டன. பானவாசி வியாபாரி யூதப்பாலா என்பவர் கார்லே என்னும் இடத்தில் ஒரு “சைத்ய கிரகா” வைக் கட்டினார்.

சாதவாகனர்கள் ஆட்சிக் காலத்தில் கன்னட நாட்டு நிலப்பகுதி மிகவும் வளமுடன் திகழ்ந்ததோடல்லாமல் வெற்றிப் பெருமிதத்துடனும் திறமையான நிறுவாகச் செயல்பாடுள்ளவர்களுமாய் விளங்கியது. அவர்களது காலம் இந்தியப் பண்பாடுகள் செழித்து வளர்ந்து ஓங்கிடுமாறு செய்ததே அவர்களின் பங்களிப்பாகும்.

© KTBS Not to be republished


# கடம்பர்கள் (கி.மி. 325 – லிருந்து 540 வரை)

சாதவாகனர்களுக்குப் பிறகு கடம்ப அரசமரபினரே கருநாடகத்தை மேன்மைபெறச் செய்தார்கள். அவர்களுக்கான தலைநகரம் பானவாசி யாயிற்று. இது இப்போது வடகனரா மாவட்டத்தில் உள்ளது. மயூரவர்மா என்ற மன்னனே இவ்வரச மரபில் பேரரசன்.

சித்ரதுர்காவிலுள்ள சந்திராவள்ளி கல்வெட்டு, மயூரவர்மன் சந்திராவதி ஏரியின் கரையை உயர்த்தி கட்டினான் என்று கூறுகிறது.

கடம்பர்கள் கருநாடகத்திற்கும், இந்தியப்பண்பாட்டிற்கும் குறிப்பிடத் தகுந்த தொண்டினையும் பங்களிப்பையும் செய்துள்ளார்கள். கடம்பர்கள் ஆட்சிக் காலத்தில் ஏறக்குறைய முன்னூறு ஆண்டுகள் அரசியல் ஒற்றுமையுடன் ஆட்சி நடத்தியுள்ளர். அரசு மதக்குருக்கள், அமைச்சர்கள் மற்றும் படைத்தளபதிகள் போன்றோர் நிருவாகத்தில் சிறப்புச் செயல்களால் நாட்டைச் செம்மைப் படுத்தினர். நிருவாகத்தில் எளிமை ஏற்படுத்திட மாநில அலுவலர்களை நியமித்து மாநிலங்களை நன்கு கவனித்துக் கொண்டனர்.

அரசின் வருவாய்க்கு முதன்மையானதாய் விளங்கியது நிலவரியே. தொழில்கள் அளவில் தச்சுத்தொழில், பொன்தொழில், இரும்புத் தொழில், நெசுவுத்தொழில், எண்ணெய்




©KTBS Not to be republished

வடித்தல் பானைகள் வனைதல் என்றவாறு குறிப்பிடத் தகுந்தவைகள் சமுதாயத்தில் நிலவின. வேளாண்மைக்கும் வாணிகத்திற்கும் பெருமளவு ஊக்கம் கொடுத்துப் போற்றப்பட்டன. பெரும்பாலான மக்கள் வர்ணாசிரம முறையைப் பற்றினர். நாட்டுப்பற்றுக்கு முதன்மையும் கூட்டுக்குடும்பத்திற்கு சிறப்புக்கவனமும் அளிக்கப்பட்டன.



மதுகேசுவாரா கோயில் - பானவாசி

வேதப் பண்பாடுகளைப் பின்பற்றுபவர்களாகக் கடம்பர்கள் இருந்தாலும் சமணத்திற்கும் புத்தத்திற்கும் ஊக்கமும் ஆக்கமும் அளித்து மக்களிடம் அன்பைப் பெற்றார்கள். சமணக் கோயில்களுக்கும் மதச் சான்றோர்களுக்கும் பொருள் கொடையும் ஹங்கல், புலிகெரெ போன்றனவான இடங்களின் நிலக்கொடை போன்றனவும் வழங்கி சமணத்தின் பண்பாடுகளை வளரச்செய்தனர்; பரவவும் செய்தனர்.

புத்தமதம் மிகவும் மேன்மையுற்று விளங்கியது என்று உணர அஜந்தா, பானவாசியைப் பார்த்து அறியலாம். கோயில்களே பெருவிழாக்களுக்கும் கண்காட்சிகளுக்கும் மையங்களாக விளங்கின. பிராகிருதமும் சமசுகிருதமும் சிறந்த முறையிலான பேரூக்கம் அளிக்கப்பட்டன. முதலில் பிராகிருதமும் அடுத்து சமசுகிருதமும் நாட்டுமொழிகளாயின. கன்னட மொழி மக்களின் மொழியாய்ச் சிறப்புற்றது. பழைமை வாய்ந்த ஹல்மிதி (Halmidi) கல்வெட்டுக்கள் கன்னடமொழி துலங்கியிருந்ததையும் 5 ஆம் நூற்றாண்டில் புழக்கத்தில் வழங்கியதையும் காணலாம். கன்னட மொழிக்கு இதுவே வரலாற்றளவில் முதலில் காணப்படும் கல்வெட்டாகும்.

**உங்களுக்கிது தெரிந்திருக்கட்டும்:** மாலவல்லிக் கல்வெட்டு, பிராகிருத மொழியை அறிமுகப் படுத்துகிறது. தாலகுண்டா கல்வெட்டு ஒரு சமசுகிருதக் கல்வெட்டாகும்.

கடம்பர்களின் குறிப் பிடத்தகுந்த கொடைத் தொண்டு எனில் கோயில் கோபுரங்களைக் கூறலாம். சான்றாக பெளகாம் மாவட்டத்தில் “கத்ரோலி” யில் உள்ள “சங்கர் தேவ் கோயில்”

கடம்பர்களே கருநாடகாவில் சிற்பக்கலை (architecture) த் தோற்றத்திற்கு அடித்தளம் அமைத்தவர்கள். அவர்களே பாணவாசியில் பலகோயில் களையும் “பசதி” களையும் கட்டினார்கள். இக்காலத்தில் தொடக்கல்வியும் உயர்நிலைக்கல்வியும் சிறப்பூக்கம் அளிக்கப்பட்டுக் கவனிக்கப்பட்டன, மற்றும் அக்ரஹாராக்கள், ப்ரம்மபுரிகள், மற்றும் காட்டிகா போன்ற இடங்கள் நிறுவப்பட்டன. அக்ரஹாரக்கள் என்பது குருகுலங்கள்



© KTBS Not to be republished

போன்றனவும் மற்றும் தங்கும் இடவசதி கொண்ட பள்ளிகளாக (Residential School) இருந்தன.

## கங்கர்கள் (கி.பி 350 – லிருந்து 1004 வரை)

கருநாடகத்தின் முற்காலத்திய வரலாற்றில் கங்கராஜா மரபினரின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் மிகவும் முக்கியமான ஒன்றாய்விளங்குகிறது. கங்கர்களின் ஆட்சிமரபைத் தோற்றுவித்தவர்கள் இக்ஷ்வாகு மரபினத்தவர்கள்தான் (Ikshwakudynasty) என்று கருதப்படுகிறது. அவர்கள் குவலாலா, தலக்காடு, மற்றும் மானியபுரா (இன்றைய மன்னே, நெலமங்களா, மற்றும் பெங்களூரு புறநகர் மாவட்டம்) போன்ற இடங்களில் இருந்து ஆட்சிசெய்தார்கள்.

கங்காவாடி மன்னர் ஆட்சி, தட்டிகாவின் ஆட்சியிலிருந்து தொடங்கி, 27 மன்னர்களால் ஆட்சிநடத்தப்பட்டது. இம்மரபில் துருவினிதா என்ற மன்னரே புகழ் வாய்ந்தவராவார். அவர் நீண்டகாலம் ஆட்சிசெய்து 'புன்னாதா' என்ற செப்புத்தகட்டின் எழுத்துக்களால் அவர்பல ஏரிகளை ஏற்படுத்தி வேளாண்மைக்கான நீர்ப்பாய்வுக்கு வழிவகுத்தார். இலக்கியத்தின் மீது பெரிதும் ஈடுபாடுகாட்டி புதுநூல்களைச் சமசுகிருதத்திலும் கன்னடத்திலும் எழுதினார். அதுமட்டுமல்லாமல் பிராகிருத மொழியிலிருந்து மொழிபெயர்த்து குணாத்யாவிந் 'வட்டகாதா' (Vaddakasha) சமசுகிருதத்தில் எழுதினார்.

### கங்கர்களின் கொடையும் பங்களிப்பும்

மன்னர் தம் ஆட்சிக்கு உதவிக்காக அமைச்சர்குழுக்கள் அமைத்துள்ளார். அவ்வமைச்சர்கள் பல்வேறு துறைகளில் மேற்பார்வைகளைச் செய்து நிருவாகத்தைச் செம்மைப் படுத்துகின்றனர். கிராமங்களின் ஊராட்சி நிறுவனங்கள் மிகவும் முறைமையும் ஒழுங்கும் வாய்ந்தவையாய் இருந்தன. ஊராட்சியில் இலங்கும் குழுக்கள் நிலவரி பிறவரி, நீதித்துறையமைப்பு, கழிவுநீர்த்துறை, பாதுகாப்புத்துறை போன்றவற்றைக் கவனித்து கொண்டன. வேளாண்மை மிக முக்கிய மான தொழிலாய் விளங்கியது. பிற தொழில்களான நெசவும், பானைகள்வனைதலும் இருந்தன. பிற நாடுகளோடு வாணிக உறவுகளும் செய்திருந்தனர்.

கங்கர்கள் ஆட்சியின் போது சமுதாயம் பல்வேறு பிரிவுகளாகவும் இனங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தாலும் அவரனைவரும் ஒருவருக் கொருவர் உட்தொடர்புடையவர்களாய் விளங்கியமை உண்மையில் வியப்பிற்கும் சிறப்பிற்கும் உரியதே. தந்தையே குடும்பத்தின் தலைவராகவும் கூட்டுக்குடும்ப முறையும் பெருவழக்காய் விளங்கின. சமூகப் பெருமைப் பண்புகளான நேர்மை, நம்பகத்தன்மை, வீரம், பொறுமை போன்றன மக்களுக்குள் பின்பற்ற வேண்டும் என்ற தூண்டுதலை உடையனவாய் இருந்தன.

கல்விக்கழகங்கள், கோயில்கள், மடங்கள், மற்றும் அக்ரஹாரங்கள் போன்றனவே கல்வி மையங்களாய் விளங்கின. அங்கே ப்ரம்மபுரிகள் காடிக்கா உயர்கல்விக்கான


©KTBS Not to be republished

இடங்கள் போன்றவையும் இலங்கின. தலக்காடு, சிரவணபௌகொளா, பங்கபுரா, பேருரு போன்ற இடங்கள் கல்வியில் சிறந்த இடங்களாக அக்காலத்தில் இருந்ததாகக் கூறப்படுகிறது.

கங்கர்கள் சமண மதத்தவராதலால் சமணம் மிகச்சிறந்த முறையில் பரவியிருந்தது. இம்மதத்தைப்புகழ்மிகு மதமாக மாற்றிடத் துணை புரிந்தவர்கள் பூஜ்யபாதா, வஜ்ரநந்தி, அஜீத்சேனா, போன்றோர் ஆவர்.

மேலும் அவர்கள் 58 அடி உயரமான ஒரே கல்லினால் ஆன கோ மட்டேஸ்வரர் சிலையை சிராவண பௌகொளாவில் நிறுவி மிகப் புகழ்வாய்ந்த மையமாக உலகம் போற்றும் வண்ணம் செய்தனர். 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை அங்கு மகாமஸ்த்தகாபிஷேகா கோமட்டீஸ்வரருக்கு நடைபெறுவதை நீங்கள் கண்டு ரசித்திருப்பீர்கள் அல்லவா?

**பாகுபலி – கோமட்டேஸ்வரா**


கோமட்டேஸ்வரா

சிரவணபௌகொளாவில் உள்ள கோமட்டேசுவரர் (பாகுபலி) துறவுக்கான சிறந்த குறியீடாகும். இச் சிலையை (கோமடேஸ்வரா சாவுண்டராயா) நான்காம் இராஜ மல்லா என்ற அமைச்சர்தான் உருவாக்கினார். 100 சகோதரர்களுள் பரதா என்பர்தான் மூத்தவர்; பாகுபலி என்பவர்தான் இளையவர். பரதன் முடிசூடி மன்னரானதும் சக்கரரத்னா (ஒருசிறப்புச் சக்கரம்) பெற்று சுற்றிலும் இருந்த பல நாடுகளை வென்று பேரரசனானார். இவ்வெற்றிகளுக்கு முன்பே பாகுபலி என்ற தம்பியைத் தவிர்த்தபிற சகோதரர்கள் அனைவரும் அப்போரரசனான அண்ணனையும் பேரரசன் என்ற பட்டத்தையும் ஏற்றுக்கொண்டனர். ஆனால் பாகுபலி என்ற கடைசித்தம்பி மட்டும் அப்பேரரசன் என்ற சிறப்பினை ஏற்கவில்லை. இருவரும் எதிர்த்துப் போரிட்டனர். பரதா நோக்குயுத்தத்தில் (த்ருஷ்டியுத்தா) தோற்றான். நீர்யுத்தத்திலும் மல்லயுத்தத்திலும் தோற்றான். மற்போரின் இறுதியில் பாகுபலி, பரதனாகிய பேரரசனைத் தூக்கிக் காற்றில் சக்கரம்போல் சுழற்றித்தொலைவில் வீசி எறிய எத்தனிக்கும் போது உலகத்தின் அனைத்துப் பற்றுக்களையும் நீக்கிடவேண்டும் எண்ணம் அவனுள் உதித்தெழுந்தது. அதனால் அண்ணனைத் தரையில் இறக்கிவிட்டு அண்ணனையும் வணங்கிவிட்டுத் தொலைவில் சென்று "நிர்வாணா" என்னும் துறவினை மனத்துள் மேற்கொண்டு நின்றவாறே தொழுகையில் ஈடுபட்டார். இன்னும் வீடுபேறு (மோட்சம்) அடையாததால் கணியர்கள் (Astrologers) கூடி பாகுபலியிடம் "நீங்கள், உங்கள் அண்ணனின் ஆளுகையின் கீழ் இருந்து தவம் மேற்கொண்டிருப்பதால்தான் மோட்சமும் நிர்வாணமும் பெறவில்லை" என்றனர். பின்னர் பரதனே, பாகுபலியான தம்பியிடம் வந்து, "இம் மாபெரும் நாடும் ஆட்சியும் உன்னுடையதே! நான்தான் உனக்காக, உன் கட்டைளையை ஏற்று ஆளுகின்றேன்" என்றார், பின்னர்தான் பாகுபலி நிர்வாணாவை வென்றதாகக் கூறுவர் முன்னோர்.

©KTBS Not to be republished

கங்க அரசர்கள் கலையையும் சிற்ப, ஓவியங்களையும், கட்டிடக் கலைகளையும் போற்றி வளர்த்தனர். அவர்களே அவற்றில் விற்பன்னர்களாக இருந்தனர். அதனால் மிகச் சிறப்பும் அழகும் மிகுந்த கோயில்களையும் பசதிகளையும் கட்டினர்.

மன்னேயில் (Manne) கபிலேஷ்வர் கோயில், தலக்காடில் பாடேலேஸ்வர் (Pataleswar) மருளேஷ்வர் (Maruleswar) கோயில்கள், கோலாரில் கோலாரம்மா கோயில், பேகூரில் நாகரேஷ்வர், சிராவணபெளகொளாவில் கோமட்டீஸ்வரர் போன்ற கோயில்கள் அனைத்தும் கங்கர்களின் கட்டடக்கலை மாண்பிற்கு மிகச் சிறந்த சான்றுகளாகும். கங்கர்களின் மாபெரும் கலைக் கொடைகளுள் பங்களிப்புகளுள் குறிப்பிடத் தகுந்தவை மிகவுயர்ந்த தூண்களான மகாஸ்தம்பாஸ் மற்றும் பிரம்மஸ்தம்பாஸ் போன்றவைகளும்தான்.

கங்க அரசர்கள் மேலும் கலையார்வத்துடன் இலக்கியங்களிலும் பெருவிருப்பம் செலுத்தினர் எனலாம். இவ்விலக்கிய ஈடுபாட்டினால் சமசுகிருதம், பிராகிருதம், கன்னடம் போன்ற மொழிகளில் பல்வேறு நூல்கள் இயற்றப்பட்டன. இரண்டாம் மாதவா என்பவர் தாட்டகாசுத்ரா (Dattaka Sutra) என்ற நூலுக்குத்திறனாய்வு-விமர்சனம் எழுதியுள்ளார்.

துர்வினிதா என்பவர் சமசுகிருதத்தில் ஷப்தவட்டாரா (Shabdavatara) எழுதி யும் குணாத்யாவின் "வட்டாகதே என்னும் நூலை சமஸ்கிருதத்தில் மொழிபெயர்த்தார். ஸ்ரீபுருஷா என்பவர் கஜாஷாத்ரா" வை Gajasha எழுதினார்; ஷிவமாதவா என்பவர் கஜாஷ்த்கா (Gajashtaka) என்று கன்னடத்தில் எழுதினார். கவிஹேமசேனா என்பவர் இராகவா பாண்டவியா, வாதிபசிம்மா என்பவர் கத்யசிந்தாமணியும் ஹாத்ராசூடாமணியையும் எழுதினர். அதேபோல் நேமிசந்திரா என்பவர் த்ரவியசாரா சம்க்ரஹா என்ற (Dravyasara Samgraha) நூலையும் சாவுண்டராயா என்பவர் சாவுண்ட புராணம் என்ற நூலையும் எழுதிப் புகழ்பெற்றனர்.



பதலேஷ்வரா கோயில் தலக்காடு

©KTBS Not to be republished

## பயிற்சிகள் :

**I. வாக்கியங்களை நிறைவு செய்க :–**

1. சிமுகா மன்னர் தன் தலைநகரமாக ________ என்ற இடத்தை மாற்றிக் கொண்டார்.
2. ________ என்ற நூலை ஹாலா என்பவர் எழுதினார்.
3. கன்னடத்தில் எழுதப்பட்ட முதல் கல்வெட்டு ________ ________ ________.
4. கடம்பர்களின் தலைநகரமான "பானவாசி" இன்றைய ________ மாவட்டத்தில் உள்ளது.
5. கங்கர்களில் மிகப் புகழ் வாய்ந்த மன்னர் ________.
6. சாவுண்டராயா என்பவர் எழுதிய நூலின் பெயர் ________.

**II. சுருக்கமான விடைதருக :**

1. சாதவாகனர்களின் கடைசி அரசன் யார்? அவர்கள் மரபு எவ்வாறு நலிவடைந்தது?
2. சாதவாகனர்களின் கலைகள் பற்றிய குறிப்புகளை எழுதுக.
3. கங்கர்களின் மரபினர் பெரிதும் போற்றும் சமூகப்பெருமைப் பண்புகள் யாவை என்பன பற்றி எழுதுக.
4. கங்கர்களின் காலத்திய நூல்களுள் நான்கினைக் குறிப்பிடுக.

**III. செயல்பாடுகள் :**

1. கல்வெட்டுக்களைப் படித்த வழிகளும் முறைகளும் பற்றி உங்கள் ஆசிரியருடன் கலந்து பேசுங்கள்.
2. வரலாற்றுப் புகழ்பெற்றதும் அண்மையில் (closer place) உள்ளதுமான ஒரு கோயிலுக்குச் சென்று அதன் செய்திகளைத் தொகுக்க. உங்கள் வகுப்புத் தோழர்களுடன் அதன் செய்திகள் குறித்தன வற்றைப் பகிர்ந்துகொள்க.

**IV. திட்டவரையறை :–**

1. கல்வெட்டுக்களைப் படித்தறிவதைப் பழகிக் கொள்ளவும்.
2. ஒருகல்வெட்டினைப் படித்தறிந்து அதுகுறித்த திட்டவரையறையைத் தயார் செய்க.
3. கங்கர்களின் தலைநகரங்களைக் காணச் சென்றுவரவும். அவற்றைப் பற்றியன செய்திகளாகத் தொகுக்கவும்.

✽ ✽ ✽ ✽ ✽

©KTBS Not to be republished

*பாடம் - 4*

# *பாதாமியின் சாளுக்கியர்கள் மற்றும் காஞ்சிப் பல்லவர்கள்*

***இப்பாடத்தைக் கற்றபின் நீங்கள் அறிவன :***

- *பாதாமிச் சாளுக்கியரின் பேரரசு பற்றியும் இரண்டாம் புலிகேசியின் நாட்டுவிரிவாக்கமும்.*
- *மத, சமுதாய, இராணுவம் மற்றும் நீதித்துறை அமைப்புகள்.*
- *பாதாமிச் சாளுக்கியரின் நாட்டு எல்லையைக் குறித்தல் (ஏற்புடையனவாக)*
- *காஞ்சிப் பல்லவர்கள் இலக்கியம், மதம், கலை, கட்டடக்கலை, கல்வி போன்ற துறைகளுக்கு ஆற்றிய பெருந்தொண்டுகள்.*

*கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் பல வலிமைவாய்ந்த மன்னர்கள் ஆட்சி செய்துள்ளார்கள். அவர்கள் பாதாமிச் சாளுக்கியர்களாவர். அவர்கள் பெரும் புகழுடன் 2 நூற்றாண்டுகள் தொடர்ந்து ஆட்சிபுரிந்து கருநாடகத்தில் தங்களின் மேலாண்மை உயர்வை வெளிப்படுத்தினார்கள். இந்தியாவின் மிகப் பெரும் வல்லரசுகளில் ஒன்றாகவும் தென்னிந்திய வரலாற்றில் ஒரு முக்கியமான இடத்தை நிறைவுசெய்வதில் சிறப்பானவர்களாகவும் இச்சாளுக்கியப் பரம்பரையினர் விளங்கினர்.*

## *பாதாமிச் சாளுக்கியர்கள் (கி.பி. 540–கி.பி 753)*

*சாளுக்கியரின் ஆட்சி 6 ஆம் நூற்றாண்டில் தொடங்கி 8 ஆம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்தில் முடிவுக்கு வந்துள்ளது. இராஜா ஜெயசிம்மா என்பவனே இம்மரபுக்குத் தொடக்க நாயகன். பேராற்றலும் குறிப் பிடத்தகுந்த எழுச்சியாளருமான இப்பேரரசப்பரம்பரையின் மன்னன் இரண்டாம் புலிகேசியேயாகும். கங்கர்களையும் கடம்பர்களையும் மற்றும் அலுபாஸ் மரபையும் வீழ்த்தித் தம் பேராண்மையைப் பரவச்செய்த மாபெரும் மன்னர் இவரே.தென்னகத்தின் உச்சிப் புகழில் பல்லவர்கள் வல்லவர்களாயும் ஆட்சியில் வீற்றிருந்ததும் இக்காலம்தான். மகேந்திரவர்மன் இரண்டாம் புலிகேசியின் ஆட்சியை இறையாண்மையை ஏற்காததினால் புலிகேசி மகேந்திரவர்மனைத் தோற்கடித்தான். வட இந்தியாவில் ஹர்ஷவர்த்தனர் ஆட்சியில் இருந்தபோது நர்மதா ஆற்றின் கரைவரை முன்னேறி வந்தார். புலிகேசி அவரைத் தடுத்து நிறுத்தி, “தட்சிணப் பாதேஸ்வரா” எனற படடப்பெயறையும் வெற்றியாய்ப் பெற்று, “தீபகற்பத்தின் மூலவன்” (Lord of the Peninsula) என்ற பேராண்மைத் துணிவுக்குப் புகழ் ஈட்டினான்.*

*இரண்டாம் புலிகேசி தன் ஆட்சிப் பரப்பளவு எல்லை முழுவதையும் ஒருமையத்திலிருந்து ஆட்சிசெய்ய இயலாது என்று உணர்ந்தார். அதனால் அவர் தன் இளைய (சகோதரன்) தம்பி குப்ஜா விஷ்ணு வர்த்தனாவை வேங்கியின் நிர்வாக இயக்குநராக*

©KTBS Not to be republished

(administrator of vengi) நியமித்தார். பின்னர் இம் மக்கள் ஏறத்தாழ ஐந்நூறு ஆண்டுகள் வேங்கிச் சாளுக்கியர்கள் என்ற பெயரில் ஆட்சிசெய்தார்கள்.



பாதாமி சாளுக்கியப் பேரரசு

யுவான் சுவாங் (சீனப்பயணி) சாளுக்கியத் தலைநகர் வந்து பார்த்துப் பெருமை மிகவும் கொண்டு இரண்டாம் புலிகேசியைப் பற்றிப் பரவலாகவும் பெருமையாகவும் விளக்கிப் புகழ்ந்துள்ளார். இம் மன்னர் நேர்மையும் அறப்பண்பும் நிறைந்தவர், அன்புடையோர் என்றும், ஒழுங்கு பட்ட படை முறையும் படைவீரர்கள் இறப்பைத் கண்டு துளியும் அஞ்சாத துணிவும் உடையவர்களாய் விளங்குகின்றனர். குடிமக்கள் உண்மையை நேசிப்பவர்களாய் வாழ்ந்தும் நிறைவுறு மனத்துடனும், சுயமரியாதையும் வளமையை எதிர்நோக்கும் நேர்மைப் பண்பையும் மன்னரின் நம்பிக்கைக் குரியவராகவும் விளங்கினர். அதேபோல் மன்னரும் குடிமக்களிடம் பேரன்புகொண்டு போற்றினர் என்று மொழிந்துள்ளார்.

இரண்டாம் புலிகேசி "எல்லாம் நன்மைக்கே" என்ற மனப்பான்மை மிக்கப் பேரரசாய் விளங்கினார், வெளிநாட்டு மன்னர்களிடம் நட்பினிய தொடர்பும் கொண்டிருந்த வராகவே ஆட்சி யில் இருந்தார். அரேபிய வரலாற்றாளர்கள் இரண்டாம் புலிகேசி வெளிநாட்டுடன் கொண்ட தொடர்புகளை விவரித்துக் கூறியுள்ளனர். அக்கருத்தின் படி தம்நாட்டுப் பேராண்மை அமைச்சர் (diplomatic relations) முறையில்பெர்சிய மன்னன் இரண்டாம் குஷ்ருவின் நாட்டு அரசவையில் இருந்ததாகக் கூறுகின்றனர்.

சில ஆண்டுகள் கழித்து, பல்லவமன்னன் முதலாம் நரசிம்மவர்மன் சாளுக்கியரைப் பழிதீர்த்துக் (தன்தந்தை மகேந்திரவர்மனைத் தோற்கடித்த முந்தைய வரலாற்றினால்) கொண்டான். அவன் சாளுக்கிய அரசின் தலைநகரான வாதாபியைக் கைப்பற்றினான். சாளுக்கிய கடைசி அரசனான கீர்த்திவர்மனின் ஆட்சிக்காலத்தில் இராட்டிரகூடர்கள் சாளுக்கியத்தைக் கைப்பற்றிக் கொண்டனர்.

### சாளுக்கியரின் பங்களிப்பு

சாளுக்கியர்கள் கன்னட நாட்டை, மொழியை, பண்பாட்டைப் போற்றி வளர்த்ததோடு அதன் சமய, மதங்களையும் இலக்கியங்கள், கலை, கட்டிடக் கலை போன்ற

©KTBS Not to be republished

அனைத்தையும் கட்டிக்காத்துவளர்த்தனர். அவர்கள் இம் மண்ணின் இன்றைய பெருமைப் பெயரான கருநாடக என்றபெருஞ்சிறப்புப் பெயரை முதல்முதலாக வழக்கிற்குக் கொண்டுவந்த கொடையாளிகள் என்றால் அது மிகையாகாது. கருநாடக வரலாற்றில் இப்பாதாமிச்சாளுக் கியரின் ஆட்சி, வரலாற்றுச் சிறப்புக்குரியது. இத்தகு குறிப்பிட்டகாலக்கட்டம் படைகளின் செயல்வீரச்சிறப்புகளில் மட்டு மல்லாது கலை இலக்கிய மேம்பாட்டிலும் சிறந்த ஒன்றாய் விளங்கியதை நாம் என்றும் மறவாமல் இருக்கவேண்டும்.

அவர்கள் 200 ஆண்டுகள் ஆட்சியில் நிலைபெற்று இருந்தனர். மன்னர்கள் ஆட்சி நிர்வாகத்தில் மிகவும் முனைப்புடன் நிர்வாகத்தில் ஈடுபட்டிருந்தினர். மன்னராட்சியில் மாவட்டங்களுக்கு 'விஷயா' என்றும் 'விஷயாதிபதி' என்பவரே அம்மாவட்டத்தைப் பார்த்துக் கொள்பவராகவும் விளங்கினார். கிராமமே நிர்வாக ஆட்சியில்சிறிய பகுதியாகும். கிராமத்தலைவர்களே கிராமக் கணக்குகளைப் பார்த்துக் கொண்டனர்.

சாளுக்கியர்கள் எல்லாவகையான சமயங்களுக்கும் (சைவம், வைணவம், புத்தம் சமணம்) ஊக்கமும் ஆக்கமும் கொடுத்துப் போற்றினர். புத்தசமய விகாரங்களும் சமணக் கோயில்களும் கட்டிட உதவினர்.


பாதாமிச் சாளுக்கியர்கள் இலக்கியத்திற்குப் பேராதரவு அளித்தனர். அதனால் கன்னடமும் சமசுகிருதமும் மிகச் சிறப்பு பெற்றன. கன்னடம் அவர்களின் மாநில ஆட்சிமொழியாய் விளங்கிற்று. இக்காலத்தில் "திரிபதி" என்ற கவிதை முறைதோன்றியது. கன்னடத்தில் நூல்கள் என்று தனியே வரவில்லை என்றாலும் பாறைகளில் கல்வெட்டுக்களாகக் கன்னடத்தில் விளங்கின. ஒரு செய்யுள் பாதாமியின் கப்பே அரபட்டாவால் திரிபதி வடிவில் எழுதப்பட்டுள்ளது.



விருபாக்ஷா கோயில், பட்டதக்கல்லு

© KTBS Not to be republished

## *கப்பே அரபெட்டாவிலுள்ள ஒரு கவிதைக் கலவெட்டு*



ಸಾಧುಗೆ ಸಾಧು
ಮಾಧುರ್ಯ೦ಗೆ ಮಾಧುರ್ಯ೦
ಬಾಧಿಪ್ಪ ಕಲಿಗೆ
ಕಲಿಯುಗ ವಿಪರೀತನ್
ಮಾಧವನೀತನ್ ಪೆರನಲ್ಲ ॥

ಒಳ್ಳೆಯವರಿಗೆ ಒಳ್ಳೆಯವನು. ಮಧುರಗುಣ ಉಳ್ಳವರಿಗೆ ಮಧುರವಾಗಿ ವರ್ತಿಸುವವನು. ತೊಂದರೆಪಡಿಸುವ ದುಷ್ಟರಿಗೆ ದುಷ್ಟರಂತೆ ಕಾಣಿಸುವವನು. ಈತನು ಅಸಾಮಾನ್ಯನಾದ ಮಾಧವನೇ ಆಗಿರುವನು.

*திரிபதிவடிவிலான (முப்பாவடி - triplet)*
*செய்யுளில் இம்மனிதன் (அரசன்)*
*பெருந்தன்மைகளுக் கெல்லாம்*
*பெருந்தன்மையானவர்,*
*இனிமைகளுக்கெல்லாம் இனிமையானவர்*
*கொடும்பகைவர்க்கெல்லாம் வெம்பகைவர் இவரே!*

*இக்காலத்தின் சமசுகிருத பெரும்புலவர்கள் ரவிகீர்த்தி, விஜ்ஜிகா மற்றும் அகாலங்கா போன்றோர் ஆவர். இரண்டாம் புலிகேசியின் மருமகள் "காமுடி மகோற்சவ்" என்ற நூலை எழுதினார். விஜ்ஜிகாவும் ஷிவபட்டாரக் காவின் ''ஹர பார்வதியாவும்'' முக்கியமான சமசு கிருத நாடகங்கள் ஆகும்.*

*பாதாமிச் சாளுக்கியர்கள் மாபெரும் கடடடக்கலை வல்லுநர்கள். அவ்வாறே கலை, இலக்கியங்களிலும் கட்டுக்கடங்கா ஆர்வலர்கள். பாதாமியில் கண்கவர் கவிநுட்பமான அழகிய கோயிலைக் கட்டியுள்ளனர். அவை அய்ஹோல், பட்டதக்கல்லு என்பனவாகும். அவர்கள் தனிச்சிறப்புடைய சிலை வடிப்பு முறையத் தங்களுக்கே உரிய முறையில் "சாளுக்கிய நடை" என்ற தோர் "இந்தியக் கட்டடக்கலை" யின் ஓர் பரிமாணத்தையே உருவாக்கினர். பாதாமியில் உள்ள கற்பாறைகளில் குகைக் கோயில்களைக் குடைந்தெடுத்தனர். அவர்கள் கலைஞர்களையும் சிற்பிகளையும் பேரூக்கம்கொடுத்துப் போற்றினர்.*

*அவர்களின் மிகச் சிறந்த 'சாளுக்கிய நடை' முறைக்கு உரிய அழகிய கோயில்கள் என்றால் அவை அய்ஹோல், பட்டதக்கல்லு என்ற இடங்களில் இருப்பவைதான் எனலாம். கோயில் கட்டடக்க கலைக்கு ஒரு தொட்டில் என்றால் அது அய்ஹோல் கோயில்தான். கோயிலின் படிப்படியான வளர்ச்சிக்கு, கட்டடக் கலையின் பரிணாமவளர்ச்சிக்கு இவ்விடத்தில் தான் தொடக்கஆய்வு செய்தனர் என்றும் கூறலாம். இப்படித்தான் இந்த மாப்புகழ் வாய்ந்த லோக்கேஷ்வரா (விருபாக்ஷா) மற்றும் திரிலோக்ஷ்வரா (மல்லிகார்ஜுனா) கோயில்களைக் காணவேண்டும். பாதாமிக் குகைகளில் காணப்படும் உன்னதமான தெய்வச்சிலைகளான விஷ்ணு, வராகா, ஹரிகரா, மற்றும் அர்த்த நாரீஸ்வரா போன்றன கலையின் முழுமையும் அடங்கிய ஒன்றாக கலையின் இறுதிநிலையே இதுவோ என்று கூறுமாறு சாளுக்கிய கலை நுட்பவளர்ச்சியாய்க் காணலாம்; வண்ண ஓவியங்களில் கூட ஆர்வம் செலுத்தி வளர்த்தனர். இதற்கான சான்றே அஜந்தா ஓவியங்கள் என்ற உலகப்புகழ் பெற்ற ஒன்றாய் இலங்குகிறது.*

©KTBS Not to be republished

# காஞ்சியின் பல்லவர்கள்
# (கி.பி. 350 முதல் கி.பி. 895 வரை)

கி.பி. 350க்குப்பின் தமிழகத்தில் பல்லவர்களே முதன்மையான மன்னர்கள். தென்னிந்தியாவில் மன்னரின்வழிவழி மரபுகளில் பல்லவர்களே குறிப்பிடத்தகுந்த செல்வாக்குடன் ஆட்சியில் திளைத்திருந்தனர். அவர்கள் கி.பி. 4 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 9 ஆம் நூற்றாண்டு வரை ஆண்டிருந்தனர். தொடக்க காலத்தில் அப்பல்லவர் சாதவாகனர்களுக்கு உதவும் அலுவர்களாய் இருந்தனர். இச் சாதவாகனர்கள் ஆட்சித்திறனில் குறைந்தபோது, பல்லவர்கள் தாங்களாகவே அவ்வாட்சி எல்லைக்கு மன்னர்கள் என்று முரசறைந்து உறுதிப்படுத்திக் கொண்டனர்.

இம்மன்னர் பரம்பரையின் முதல்மன்னன் சிவாஸ்கந்தவர்மன் ஆவான். இப்பல்லவர்களும் கடம்பர்களும் நிலையான உட்பகையை ஒருவருக்கொருவர் கொண்டு வேறு புகலிட மின்றிப் போரிட்டவாறு இருந்தனர். சாளுக்கியப் பரம்பரையின் இரண்டாம் புலிகேசி பல்லவப் பரம்பரையின் மகேந்திரவர்மனைத் தோற்கடித்தான். முதலாம் நரசிம்ம வர்மப் பல்லவன் ஆட்சிக்கு வந்து மிகப் புகழ்வாய்ந்த மன்னன் என்ற பெயர்பெற்றார். அவனே சாளுக்கிய இரண்டாம் புலிகேசியைப் பழிவாங்கி 'வாதாபியை'க் கைப்பற்றினான். இந்தப் பெருந் துணிச்சலான வீரச் செயலால் 'மாமல்லன்' என்றும் 'வாதாபிகொண்டான்' என்றும் வீரப்பட்டப் பெயர்களைச் சூட்டிக்கொண்டான். 'யுவான்சுவாங்' (Huien Tsang) என்றசீனப் பயணி இம் மன்னன் ஆட்சிக்காலத்தில் காஞ்சியைக் கண்டு போற்றிச் சென்றார். நரசிம்மவர்மப் பல்லவன் காஞ்சிக்கு அண்மையில் ஒரு கடற்கரைநகரம் ஒன்றை அமைத்தான். அதற்கு மகாபலிபுரம் என்றும் பெயரிட்டான். தனிக்கற்களால் ஆன கோயில்கள் பல அமைத்தான்.

அபராஜித பல்லவன் ஆட்சிக் காலத்தில் சோழர் பரம்பரையின் ஆதித்யன் பல்லவர் ஆட்சிக்கு முடிவுகட்டினான்.

### பல்லவரின் பங்களிப்புகள் (பல்லவர், நாட்டிற்கு செய்த நன்மைகள்)

தமிழ் நாட்டில் முறைப்படியான நிர்வாகத் திறனை 4 - ஆம் நூற்றாண்டிற்குப் பிறகும் அறிமுகப் படுத்தியவர் இவர்களேயாவர். அவர்கள், இலக்கியம், மதம், கலை, கட்டடக்கலை மற்றும் கல்வி போன்றவற்றிற்கு பெருநன்மைகளை செய்து உலகம் போற்றும் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளனர்.

சாளுக்கியர்கள் வாதாபியையும் பல்லவர்கள் காஞ்சியையும் ஆட்சிபுரிந்த அந்தக் காலம் தென்னகத்தின் வீரம் விளைந்த பேராண்மைக் காலமாய்க் கருதப்பட்டது. அப்பல்லவர் ஆட்சிக்காலம் மிகவும் உறுதியாயும் முறைப்படுத்தப் பெற்ற நிர்வாகத்தையும்

©KTBS Not to be republished

கொண்டு விளங்கியது. அங்கே அமைச்சர்களும் மாநில அலுவலர்களும் இருந்தனர். அவ்வரசாட்சி மண்டலங்களாக, நாடுகளாக, கிராமங்களாகப் பிரிக்கப் பட்டிருந்தது. கிராமங்களின் சிக்கல்கள், பிரச்சனைகளைக் கிராமசபைகள் தீர்த்து வைத்தன. கிராம போஜகா என்பவர் கிராமங்களின் நிர்வாகத்தைப் பார்த்துக் கொண்டார்.

பல்லவர்கள் தமிழையும் சமஸ்கிருதத்தையும் போற்றி வழங்கினர். காஞ்சி, சமஸ்கிருத இலக்கியத்தின் மையமாய் இருந்துவந்தது. பாரவி கிருதார்ஜுனியா (Kiratarjuniya) மற்றும் தண்டி (தசகுமார் சரித) போன்ற கவிஞர் பெருமக்கள் பல்லவப் பரம்பரையில் குறிப்பிடத்தகுந்தவர்கள். மகேந்திரவர்மன் என்ற அரசனே சமூகநாடகங்களையும் மத்த விலாச பிரகாசனாவும் மற்றும் பாகவதுஜுகா (Bhagavadujjuka)என்ற நூலையும் படைத்துள்ளார். பல்லவர்கள் அனைத்து மதங்களையும் போற்றினர்.

முற்காலப் பல்லவர்கள் புத்த மதத்தைதை தழுவிவந்தனர். நாளந்தா பல்கலைக் கழகத்தின் மிகப் புகழ்வாய்ந்த தர்மபாலா என்பவர் காஞ்சியில் பிறந்துள்ளார். சமண மதத்தை (Jainism) மகேந்திர வர்மன் தழுவியதால் அவ்வாட்சி யில் பல சமணர்கள் இருந்தனர்.

> சைவமும் வைணவமும் கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் மிகவும் ஓங்கிச் சிறந்து விளங்கின. பெரும்புகழ் வாய்ந்த சமயத்துறவிகளான 63 நாயன்மார்கள் சைவசமயத்தைப் பரப்பினர். பெரும் புகழ் வைணவத் துறவிகளான 12 ஆழ்வார்கள் வைணவ சமயத்தைப் பரப்பினர்.

இக்காலக் கட்டம், பக்தி இயக்கம் செழித்தோங்கி வளர்வதற்குபெருந்துணை புரிந்தது. அதே நேரத்தில் வேதம் சார்ந்த மதங்கள் மறுமலர்ச்சி பெற்றிடவும் அருந்துணையாற்றியது. "மந்திரச் சொல் மாலைகள்" (Slokas) தமிழில் தோன்றின. பக்தி மொழியாய்த் தமிழ் தன்னை உயர்த்திக் கொண்டகாலம். தமிழின் உயர்தனிச் செம்மை பக்திக்கனி மொழியாய் உலகுக்கு உணர்த்திய காலம்.



மகாபலிபுரம் - ஐந்து தேர்கள்

பல்லவர்கள், கலையிலும் கட்டடக் கலையிலும் பெருங்காதலர்கள் என்று உணர்த்திய காலம். அவர்கள் தங்கள் நாட்டில் பல கோயில்களைக் கட்டினார்கள். அவை அனைத்தும் சிற்பக்கலையின் பண்பினையும் நுட்பப் பெருமையினையும் பறைசாற்றுவன. பல்லவரின் கட்டடக் கலையின் பிரிவுகளாக குடைவரைக் கோயில்களையும் கோயில்களின் கட்டடக்கலை அமைப்பியல் முறையின் மேன்மைகளையும் கூறிடலாம்.

©KTBS Not to be republished

மகாபலிபுரத்தில் பெரும் பாறைகளக் குடைந்து பல கோயில்களைச் சமைத்த முறைகளை வியப்பின் விளிம்பில் நம்மைச்சிக்கிடச் செய்யும் தனித்தன்மை பெற்றுள்ளன. ஒற்றைக் கல்லினாலான சிலைகள் குடைவு முறைகளால் அமைத்துள்ளதை நோக்கின் ஆச்சிரியமே நம் புருவங்களாயினவோ என்னும்படி நம் உள்ளம் களிகொள்ளும். அவை அவற்றையும் தாண்டி மகாபாரதக்கதைகளையும் பகவத் கீதைக் கதைகளையும் கல்சிற்பக்கவிதையாய்க் கூறும். உலகம் போற்றும் பஞ்சரதங்கள் ஐந்து தேர்கள் ஒவ்வொரு தனித்தனிக் கற்கோயில்கள் என்ற பெருமையை உய்த்துணர்ந்து நோக்கிடச் செய்யும். 'அர்ச்சுனன் தவம்' என்ற சிலை வடிவம் சிறந்ததோர் கலைப் பெருமைக்குரிய படைப்பாகும்.

காஞ்சியில உள்ள கைலாச நாதர் கோயில், ஏகாம்பரநாதர் கோயில், வைகுண்ட பெருமாள் கோயில் போன்றனவும் கடற்கரைத் துறைநகரான மகாபலிபுரத்தில் உள்ள கோயிலும் இந்தியக் கட்டடக்கலைக்கும் கோயில் முறைகளுக்கும் சிறந்ததோர் சன்றுகளாய் திகழ்வன.

கோயில்களே மதங்களின் செயல்களுக்கும் கலைத் துறைச் செயல்களுக்கும் மையங்களாய்ச் செயல்பட்டன. நாட்டுப் புற மக்கள் கோயில்களின் வெளிச்சுற்றுக்கட்டுக்களில் (Courtyard முற்றம்) மாலை நேரங்களில் ஒன்று கூடித் தங்களின பல்வேறு செய்திகளுக்கு, சிக்கல்களுக்குத் தீர்வுகாண முயலுவர். அம் மக்கள் மேலும் தங்கள் ஓய்வு நேரங்களில் வந்தமர்ந்து புராணக் கதைகளைக் கேட்டும் கவனித்தும் நீதிநெறிப் பாடல்களைக் கூட்டாய்ப் பாடியும் கேட்டும் மகிழ்வர். இம் முறையில் கோயில்கள் சமுதாயத்திற்கும் கல்வித்துறைக்கும் மையங்களாய் விளங்கின.

பல்லவர்கள் மிகச்சிறந்த கடற் படைகளை நடாத்தினர். கடல் வாணிகம் செய்வோர் தெற்கு ஆசிய நாடுகளான மலாயா (Malaya), இந்தோனேஷியா போன்றன வற்றிலும் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். இந்திய மொழியும் நம்பிக்கைகளும், மரபுகளும் பண்பாடுகளும் இன்றைக்கும் அந்த நாடுகளில் வாழ்ந்து வருவதைக் காணலாம்.

**பயிற்சிகள் :**

**I. கோடிட்ட இடங்களைத் தகுந்த சொற்களால் நிரப்புக.**

1. இரண்டாம் புலிகேசியால் தோற்கடிக்கப்பட்டப் பல்லவ மன்னன் பெயர் ________
2. கருநாடகா என்ற பெயரை அளித்த அரசபரம்பரை________
3. ஹரபர்வாடியா என்ற சமசுகிருத நாடகத்தை எழுதியவர் ________
4. வாதாபிகொண்டான் என்ற புகழ்ப் பெயரை அடைந்த பல்லவன் ________.
5. "அருச்சுனன் தவம்" சிலை வடிவம் இருக்கும் இடம் ________



©KTBS Not to be republished

**II. *கீழ் வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.***

1. இரண்டாம் புலிகேசிதன் நாட்டை எவ்வாறு விரிவுப் படுத்தினான்.
2. சாளுக்கியர்களின் நிர்வாக முறைகளை விவரி.
3. சாளுக்கியர்கள் இலக்கியங்களின் மீது பேரார்வம் காட்டினர் என்பதை விளக்கிச் சான்றுளைத்தருக.
4. காஞ்சியில் ஆட்சிபுரிந்த பல்லவ மன்னர்களின் பெயர்களை எழுதுக.
5. பல்லவர்கள் தமிழையும் சமசுகிருதத்தையும் எவ்வாறு போற்றி வளர்த்தனர்?

**III. *செயல்பாடுகள் :***

1. சாளுக்கியர்கள் கன்னட மொழியின் வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்புக்கள் பற்றிய கருத்துகளை மாணவர் குழுக்களாக இருந்து கலந்துரையாடல் செய்க.
2. உம் ஆசிரியர்களிட மிருந்து திரிபதி பற்றி கற்றுக்கொள்வீர்! கன்னட புத்தகங்களையும் படிப்பீர்.
3. காஞ்சிக்கும் மகாபலிபுரத்திற்கும் சுற்றுலா சென்று வருக.

**IV. *திட்ட வரைவுகள்* (Projects) *:–***

1. வரலாற்றுச் சிறப்புடைய இடங்களுக்குச் சென்று செய்திகளைத் தொகுத்து வைக்கவும்.
2. படங்களைவரைக, படங்களைத் தொகுக்க, ஒருபடத்தொகுப்பினை ஏற்படுத்துக.

✽ ✽ ✽ ✽ ✽

©KTBS
Not to be republished

*பாடம் : 5*

# *மான்யகேதாவின் ராஷ்ட்ரகூடர்கள் மற்றும் கல்யாணா சாளுக்கியர்கள் (கி.பி. 753 - 973)*

***இப்பாடத்தைக் கற்றபின் நீங்கள் அறிவன :***

- *ராஷ்டிர கூடர்கள் வம்சத்தை ஏற்படுத்தியவர் தந்திதுர்கா ஆவார்.*
- *அமோகவர்ஷா மிகவும் புகழ்வாய்ந்த அரசராவார்.*
- *நிர்வாகம், இலக்கியம் மற்றும் கட்டிடகலைக்கு அவர்களின் பங்களிப்புகள்.*
- *இந்திய வரைபடத்தில் ராஷ்டிர கூடர்களின் நாட்டுப்பகுதியை குறித்தல்.*

*ராஷ்ட்ரகூடர்கள் கன்னடியர்கள் ஆவர். அவர்கள் துவக்கத்தில் சாளுக்கியர்களுக்கு கப்பங்கட்டும் அரசர்களாக இருந்தனர். பிறகு தென்னிந்தியாவில் பரந்த பேரரசை நிருவியபிறகு அவர்கள் புகழுடன் விளங்கினர். கருநாடக வரலாற்றில் ராஷ்டிரகூடர்களின் காலம் ஒரு முக்கிய காலமாக இருந்தது. கர்நாடகப் புகழை உச்சிக்கு இட்டுச் சென்ற பெருமை அவர்களையேச் சாரும். அவர்களின் அரசு வடக்கில் நர்மதையாறிலிருந்து தெற்கில் காவேரியாறுவரை பரவி இருந்தது. எல்லோராவிலுள்ள கைலாசநாதர் கோயிலும் முதல் கன்னட இலக்கியமான கவிராஜ மார்க்கமும் ராஷ்டிரகூடர்களின் ஆட்சிக்கு அழியாப் புகழைத்தந்தது.*

## *ராஷ்டிர கூடர்கள் (கி.பி. 753 - கி.பி. 973)*

*நந்திதுர்கா அரசரால் துவங்கப்பட்ட அவர்களுடைய ஆட்சி கிருஷ்ணா, இரண்டாம் கோவிந்தர், துருவா, மூன்றாம் கோவிந்தர், அமோகவர்ஷர் மற்றும் பிறரால் தொடரப் பட்டு புகழின் உச்சியை அடைந்தது. அமோகவர்ஷரின் ஆரம்பகால ஆட்சியில் பல குறுக்கீடுகளை அவர் சந்தித்தார். ஆனால் அவர் பகைமை பாராட்டாது அமைதியை நாடினார். இதனால் கங்கர்கள் மற்றும் பல்லவர்களுடன் பகைமையை புறந்தள்ளி திருமண உறவை மேற்கொண்டார். அவர் அமைதியை விரும்பிய வராதலால் வடக்கில் ஒரு சிலப்பகுதிகளை விட்டுக்கொடுக்க வேண்டியவரானார். மேற்கு கடற்கரையில் உள்ள துறைமுகங்கள் ஓயாது சுறுசுறுப்புடன் இயங்கும் வாணிகமையங்களாக விளங்கின. பாரசீகம் மற்றும் அரபு நாடுகளுடன் மேற்கொண்ட வாணிகத்தால் அளப்பரிய செல்வசெழிப்பை பெற்றுத்திகழ்ந்தது. இக்காலக் கட்டத்தில் பல பயணிகளும் வணிகர்களும் ராஷ்டிரகூடர்களின் அரசுக்கு வருகைத்தந்து பார்வையிட்டனர்.*

*அமோகவர்ஷர் ஒரு வீரமிக்கவராகவும், அமைதியை பேணுபவராகவும் அனைத்து சமயத்தவர்களையும் ஊக்குவிப்பவராகவும் விளங்கினார். அவருக்குப்பின் இரண்டாம் கிருஷ்ணர், மூன்றாம் இந்திரர் மற்றும் மூன்றாம் கிருஷ்ணர் ஆகியோர் ஆட்சிக்கு வந்தனர். இரண்டாம் கர்கா (Karka II) காலத்தில் கல்யாண சாளுக்கிய மன்னர் இரண்டாம் தைலப்பாவால் ராஷ்டிரகூடர்களின் ஆட்சிக்கு முடிவுகட்டப்பட்டது.*

©KTBS Not to be republished